



# மட்டக்களப்பு உள்ளூராட்சி

# மகுடம் 2012

## விருது வழங்கும் நிகழ்வு
## சிறப்பு மலர்

04.03.2013

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,

மட்டக்களப்பு.

# மட்டக்களப்பு உள்ளூராட்சி மகுடம் 2012.

# விருது வழங்கல் நிகழ்வு சிறப்பு மலர்

## 04.03.2013

**IEC PURANEGUMA / GGRC**

**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் மட்டக்களப்பு.**

மட்டக்களப்பு

# உள்ளூராட்சி

மகுடம் – 2012

## விருது வழங்கும் நிகழ்வு
## சிறப்பு மலர்
## 04.03.2013

**நெறியாள்கை**

*திருமதி.ந.சத்தியானந்தி*
பிராந்திய உள்ளூராட்சி உதவி
ஆணையாளர்
மட்டக்களப்பு.

**நூலாசிரியர்**

*அன்பழகன் குரூஸ்*

**நூலாக்கக் குழு**

*திரு.வே.முருகமூர்த்தி*
*திரு.வ.தேவநேசன்*
*செல்வி.க.தமயந்தி*
*திரு.சி.்குகநேசன்*
*திரு.க.ரவிச்சந்திரன்*
*திருமதி.நவநீதா கணாதீபன்*
செல்வி. S. சவிதா

வெளியீடு
**IEC - Puraneguma**
**Batticaloa.**

GGRC
**Good Governance Resource Centre**
**Batticaloa.**

பிராந்திய உள்ளூராட்சி உதவி
ஆணையாளர் அலுவலகம்
மட்டக்களப்பு.

## நூலாசிரியரிடமிருந்து.........

மட்டக்களப்பின் உள்ளூராட்சி சேவைகள் கடந்த ஆறு ஆண்டுகளில் மிக வேகமான வளர்ச்சி கண்டுள்ளதை யாவரும் இலகுவாக அவதானிக்கலாம். இதன் பின்னணியில் மாவட்டத்தை வழிநடத்தி வரும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி.ந.சத்தியானந்தி முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

பல கோணங்களில் இருந்தும் வளங்கள் பெறப்பட்டதும், உள்ளூராட்சிப் பணியாளர்களுக்கு வேண்டிய பயிற்சிகள் வழங்கப்பட்டதும் இந்த அபிவிருத்திக்கான முக்கிய செயற்பாடுகளாகும்.

இவரது காலத்தில் தொடர்ந்து இயங்கிவரும் நல்லாளுகை வள நிலயத்தினால் இரு நூல்களும் பல தொடரான பருவ மடல்களும் வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி பணியாளர்களின் சேவை வழங்கு திறனை மதிப்பீடு செய்து அவர்களை ஊக்குவித்து பிறரறியச் செய்வதன் மூலம் அவர்களிடமிருந்து மென்மேலும் சேவை பெறலாம் என்ற வகையிலும், ஏனைய பணியாளர்களுக்கும் இதுவோர் எடுத்துக் காட்டாக அமைந்து, சேவை வழங்கு திறனைத் தூண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இந்த விருது வழங்கல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் ஒருங்கமாக இந்நூல் வெளியிடப்படுவது இன்னும் ஒருபடி மேலானது. இந்நூலாக்கத்துக்கு உதவிய அனைவருக்கும் நன்றிகள்.

அன்பழகன் குரூஸ்
- நூலாசிரியர் -



# கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு.ம.உதயகுமார் அவர்களின் செய்தி

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளை வினைத்திறன் உடையதாக்குவதில் பலரது முயற்சி பாராட்டுக்குரியது. இந்த அடிப்படையில் மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி திணைக்களத்தின் செயற்பாடுகள் குறிப்பிட்டுக் கூறக் கூடியதாகும்.

மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி திணைக்களத்தின் செயற்பாடுகளின் மேலும் ஒரு முயற்சியாக புறநெகும திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களை ஊக்கப்படுத்தும் வகையில் உள்ளூராட்சி மகுடம் விருது வழங்கல் நிகழ்வும் அதன் ஒரு அங்கமாக நூல் வெளியீடும் இடம் பெறுவது பாராட்டுக்குரியது.

இந்த முயற்சி உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளையும், உத்தியோகத்தர்களையும், ஊழியர்களையும் ஊக்கப்படுத்துவதுடன் மேலும் வினைத்திறன் உடையவர்களாக உருவாக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இந்த நூல் மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி பற்றிய தகவல்களை ஆவணப்படுத்துவதாக அமைவதுடன் வெளிப்படைத்தன்மையையும் மக்களை உள்ளூராட்சியுடன் மேலும் நெருக்கமாக கொண்டு வருவதற்கு உதவும் என நான் நம்புகிறேன்.

நூல் சிறக்கவும் விருது வழங்கல் நிகழ்வு சிறப்பாக அமையவும் என் வாழ்த்துக்கள்.





# திரு. A.S. கௌரிபாலன்

## பொறியிலாளர்

**I.C.E.Specialist, Puraneguma.I**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் அவரது உத்தியோகத்தர்களும் "புறநெகும" செயற்திட்டத்தில் ஆர்வமுடன் பணியாற்றிவரும் நிலையில், தற்போது புதிய ஒரு நிகழ்வாக "மட்டக்களப்பு உள்ளூராட்சி மகுடம் 2012" என்னும் விருது வழங்கும் நிகழ்வை நடாத்துவது குறிப்பிடத்தக்க விடயம்.

இந் நிகழ்வு கிழக்கு மாகாண புறநெகும செயற்திட்டத்தின் தகவல் வழங்கல், கற்பித்தல், தொடர்பாடல் (Information, Education, Communication) பிரிவுக்கு சிறந்ததொரு வெளியீடாகவே இதை நான் பார்க்கிறேன். இந்த மூன்று விடயங்களையும் இந் நிகழ்வு உள்ளடக்குகின்றது.

இந்த நிகழ்வு எமது செயற்திட்டத்தின் ஒரு முக்கிய பதிவாகவும், மைல் கல்லாகவும் அமைகின்றது. இதுவரை நாம் புரிந்த உழைப்பின் பயன் இதுவாகும்.

ஊழியர்கள் பணியாற்றும் போது அவர்களை ஊக்கப்படுத்த வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் பணியாளர்களின் செயற்திறனை மேலும் அதிகரிக்கலாம். அந்த விடயத்தை இந்த நிகழ்வு மேற்கொள்கின்றது.

இந்த நிகழ்வு, ஆர்வம் (InterEst) மனப்பாங்கு (Attitude) திறமை (Capacity) ஆகியவற்றின் கலவையாகவே நான் பார்க்கிறேன்.

இந்த நிகழ்வின் ஒரு அங்கமான இந்தப் புத்தகம் அனைவரும் விரும்பி வாசிக்கும் நூலாக அமையும் என எதிர்பார்த்து வாழ்த்துகின்றேன்.



# மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

உள்ளூராட்சி துறையில் எனக்கு பணியாற்ற கிடைத்தமையை இட்டு பெருமிதம் அடைகின்றேன். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் வளர்ச்சி வேகம் அண்மைக்காலங்களில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றகரமான மாற்றங்களினை அடைந்துவருகின்றமை கண்கூடு.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்பான உன்னதமான பணியினை சமூகத்திற்கு மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு பணிபுரிவோரை கௌரவித்து ஊக்குவிக்க வேண்டும் என்பது என் மனதில் சில காலங்களாக பதியப்பட்டிருந்தது.

இதன் விளைவாக ஏற்பட்டதே **"மட்டக்களப்பு உள்ளூராட்சி மகுடம் – 2012"** நிகழ்வாகும் அதன் ஒரு அங்கமாக இச் சிறப்பு மலர் வெளியீடு இடம் பெறுகின்றது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இத்தருணத்திலே குறித்த நிகழ்வினை சிறப்புற நடாத்துவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கிய அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

இந் நிகழ்வின் ஊடாக எதிர்காலங்களில் மக்கள் பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தமது பணியினை சிறப்பாக ஆற்றுவதற்கு உற்சாகத்தையும், உந்து சக்தியையும் பெறுவார்கள் என்பதும் அதனூடாக மக்களுக்கு சிறந்ததோர் நல்லாட்சிப் பண்பு மிக்க உள்ளூராட்சி சேவை மாவட்டத்தில் மிளிரும் என்பது என் திடகாத்திரமான நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஆகும்.

**திருமதி.ந.சத்தியானந்தி**
*பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,*
*மட்டக்களப்பு.*

# நோக்கம் :-

- மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் சேவை வழங்கு திறனை மதிப்பீடு செய்தல்.
- உள்ளூராட்சி பற்றிய எழுச்சியினூடாக பொது மக்களுடன் தொடர்பாடலை ஏற்படுத்தல்.
- கடந்த காலச் செயற்பாடுகளை மதிப்பீடு செய்து ஊக்குவிப்பதன் மூலம் எதிர்காலத்தில் சேவை வழங்கு திறனை மேம்படுத்தல்.
- புறநெகும திட்டத்தின் மூலம் மக்களுக்கான அறிவூட்டலை மேம்பாடடயச் செய்தல்.
- கடந்த கால அனுபவங்களின் ஊடாக எதிர்காலச் செயற்பாடு களுக்கான அறிவூட்டல்.

## மட்டக்களப்பு மாவட்ட கௌரவ தவிசாளர்கள்-2012



**இடமிருந்து வலமாக:-**

கௌரவ தவிசாளர் செய்யது அலி ஸாஹிர் மௌலானா (ஏறாவூர் நகர சபை), கௌரவ தவிசாளர் விநாயகமூர்த்தி சிறிதரன் (போரதீவுப்பற்று பிரதேசசபை)
கௌரவ தவிசாளர். சாஹுல் ஹமீட் முகமட் அஸ்பர் (காத்தான்குடி நகர சபை), கௌரவ தவிசாளர் சிதம்பரப்பிள்ளை வினோத் (ஏறாவூர் பற்று பிரதேசசபை),
கௌரவ தவிசாளர் மேரி கிறிஸ்ஷனா சசிதரன் (மண்முனை பிரதேசசபை), திருமதி ந. சத்தியானந்தி - (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மட்டக்களப்பு),
கௌரவ தவிசாளர் சுப்ரமணியம் சிவஞானம் - (மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை), கௌரவ தவிசாளர் காசிம்பாவா சாஹுல் ஹமீட் - (கோறளைப்பற்று மேற்கு பிரதேசசபை),
கௌரவ தா. உதய ஜீவதாஸ் (கோறளைப்பற்று பிரதேச சபை), கௌரவ தவிசாளர் தம்பியப்பா பேரின்பராஜா - (மண்முனை தென்மேற்கு பிரதேசசபை),
கௌரவ தவிசாளர் காத்தமுத்து சுப்ரமணியம் - (மண்முனை மேற்கு பிரதேச சபை)

மேலும் : - கௌரவ கண்ணப்பன் கணேசன் (கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை).

# வழங்கப்படும் விருதுகள் விபரம்

- தவிசாளர் . சிறந்த மக்கள் தொடர்பு
- தவிசாளர் . சிறந்த நிர்வாக முகாமைத்துவம்
- தவிசாளர் . பிரதேச அபிவிருத்தி நடடிக்கையில் வெளிநிதியீட்டங்களை உள்வாங்குதல்.
- தவிசாளர் - நல்லாட்சி
- சிறந்த உப தவிசாளர்
- சிறந்த சபை உறுப்பினர்
- செயலாளர் - நிர்வாகம்
- செயலாளர் - சுற்றாடல் முகாமைத்துவம்
- செயலாளர் - (பிரஜைகள் பிரகடனம்).
- சிறந்த செயலாளர் - அறிக்கையிடல்
- சிறந்த செயலாளர் – ஒத்துழைப்பு
- தவிசாளர், செயலாளர் நிர்வாகத்திற்கான சிறந்த உள்ளூராட்சி மன்றம்
- தவிசாளர், செயலாளர் சிறந்த செயற்பாட்டை செய்துள்ள உள்ளூராட்சி மன்றம் - புறநெகும
- திட்டம்மூலம் சிறந்த செயற்பாட்டை செய்து (Best practice) மக்களின் பெருவரவேற்பினை பெறுதல்
- தவிசாளர், செயலாளர் சிறந்த பெறுகை நடைமுறைகளை கடைப்பிடிக்கும் உள்ளூராட்சி மன்றம்.

- தவிசாளர், செயலாளர் சிறந்த செயற்பாட்டை செய்துள்ள உள்ளூராட்சி மன்றம் - சபை நிதி
- தவிசாளர், செயலாளர் சிறந்த அலுவலக கட்டமைப்பு.
- உள்ளூராட்சி உதவியாளர் - திட்டமிடல்
- சிறந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் - அபிவிருத்தி வேலைகளுக்கான திட்டமிடல்
- சிறந்த வருமான மேற்பார்வையாளர்.
- விடய உத்தியோகத்தர் - உள்ளகக் கணக்காய்வு.
- சிறந்த மக்கள் தொடர்பு உத்தியோகத்தர்.
- சிறந்த காரியாலய காரிய சகாயர்(K.K.S)
- அலுவலக சிற்றூழியர் - அர்ப்பணிப்பான சேவை.
- சிறந்த காவலாளி.
- வளர்ந்து வரும் சனசமூக நிலையம்.
- சிறந்த பாலர் பாடசாலை.
- சிறந்த நூலகர்.
- சிறந்த நூலகம் - (தகவல் தொழில்நுட்பம்)
- சிறந்த வாசகர் வட்டம்
- சிறந்த சாரதி - வாகனப் பராமரிப்பினை சிறந்த முறையில் மேற்கொள்ளல்
- சிறந்த வீதித்தொழிலாளி
- சிறந்த சுத்திகரிப்பு தொழிலாளி

- சிறந்த சமூகக்கணக்காய்வு குழு
- பிரதேச செயலாளர் - உள்ளூராட்சி மன்றத்துடன் ஒத்துழைத்துச் செயற்படல்
- சுகாதார வைத்திய அதிகாரி - உள்ளூராட்சி மன்றங்களின் சுகாதார நடவடிக்கைய்யில் ஒத்துழைப்புடன் செயற்படல்
- பொதுச் சுகாதார பரிசோதகர் - உள்ளூராட்சி மன்றங்களின் சுகாதார நடவடிக்கையில் ஒத்துழைப்புடன் செயற்படல்
- சிறந்த ஓய்வு நிலை உள்ளூராட்சி சேவை உத்தியோகத்தர்
- உள்ளூராட்சி சபை நடவடிக்கையில் ஈடுபாடு கொண்டுள்ள சிறந்த பிரஜை ஒருவர்
- உள்ளூராட்சி சேவையில் பெண் சாதனையாளர்
- இறுதிக் கணக்கறிக்கை தயாரித்தல் - துறைசார் நிபுணத்துவம்
- வருமானங்களை ஈட்டிக்கொள்வதில் முன்மாதிரியாக விளங்கும் உள்ளூராட்சி மன்றம்.
- இதுவரை நடைபெற்ற போட்டிகளில் அதிக தடவைகள் விருது பெற்ற உள்ளூராட்சி மன்றம்.

மட்டக்களப்பு உள்ளூராட்சி மகுடம் 2012

# பொருளடக்கம்...


- பிரதேச சபைகளின் ஆதனவரி அறவீடு - 01
- உள்ளூராட்சி மகுடம் (கவிதை) - 06
- மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி திட்டமிடலும்........................ - 07
- மாகாண அளவில் விருது பெற்ற புகைப்படங்கள் - 16
- உள்ளூராட்சி மன்றங்களின் சமூகக் கணக்காய்வு குழுக்கள் - 20
- சேவையில் உள்ளூராட்சி (கவிதை) - 23
- சமூக வகைப் பொறுப்புக் கூறல் - 24
- உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் - 29
- உள்ளூராட்சி நிறுவனங்களின் பெறுகை நடைமுறை - 33
- உள்ளூராட்சி மன்றங்களின் துணை விதிகள் - 36
- உள்ளூராட்சி மன்றங்களின் நூலக சேவை - 39



அமர்ந்திருப்போர். (இடமிருந்து வலமாக)
செல்வி K. தமயந்தி, செல்வி K. வளர்மதி, திருமதி J.P. சர்மிளா, திருமதி K. சிவசக்தி, திருமதி G. பிறேமா, திருமதி N. சத்தியானந்தி (ACLG), திருமதி. P. மனோகரி, திருமதி L. கலைவாணி, திருமதி L. தியாகராஜா, திருமதி. N. கனாதீபன், திருமதி. R. ரமேஸ்வரன்.

பின்வரிசையில் நிற்போர். (இடமிருந்து வலமாக)
திரு T. மகேந்திரன், திரு K. ரமணன், ஜனாப் A. C .M. நியாத், திரு V. முருகமூர்த்தி, திரு. P. சிறீதர், திரு S. குகநேசன், திரு. M. பரம்பராசா, திரு. A.R.A. குரூஸ், திரு K. ரவிச்சந்திரன், திரு. S. வசந்தராஜா, திரு. M. கருணாநிதி, திரு A. நந்தேஸ்வரன், திரு. M. யசோதரன், திரு. K. புவனேந்திரன், திரு S. சத்தியேஸ்வரன். திரு V. தேவநேசன், ஜனாப் A. ஹாரூன்,

மேலும் (படத்தில் இல்லாதோர்).
திரு T. லோகநாதன், திருமதி I. விமல்ராஜா, திருமதி S. நிர்மலராஜா, திருமதி D.P.S. றொபேட், திருமதி S. உருத்திரகாந்தன், செல்வி S. சவிதா, ஜனாப். A.L. இர்பான், திரு K. அம்பிகைபாகன்.

# பிரதேச சபைகளில் ஆதனவரி அறவீடு

இலங்கை பெருமை வாய்ந்த உள்ளூராட்சி முறையொன்றைக் கொண்ட நாடாகும் இலங்கையில் மன்னராட்சிக் காலம், அந்நியர் ஆட்சிக்காலம், சுதந்திரத்தின் பின்னரான காலம் என பல்வேறு கட்டங்களில் மாற்றமும், வளர்ச்சியும் பெற்றுள்ள உள்ளூராட்சி முறைமையில் தற்போது மாநகரசபைகள், நகரசபைகள், 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட பிரதேச சபைகள் ஆகிய உள்ளூராட்சி அமைப்புக்கள் செயற்படுகின்றன.

உள்ளூராட்சி அமைப்புக்கள் மக்களுக்கு மிக நெருக்கமான தேவைப்பாடுகளான பொதுச் சுகாதாரம், துப்பரவு ஏற்பாடுகள், வீதிகள் அபிவிருத்தி, குடிநீர் விநியோகம், சந்தை வசதிகள், நூலகசேவை, மைதானங்கள், மயானங்கள் பராமரிப்பு, அனர்த்த சேவைகள் ஆகிய இன்னோரன்ன பொதுப் பயன்பாட்டுச் சேவைகளையும் மக்கள் நலனோம்பு சேவைகளையும் மக்களுக்கு நல்கி வருகின்றன.

பிரதேச சபைகள் நாட்டில் பரந்து காணப்படுகின்றன. நாட்டின் 99% நிலப்பரப்பை பிரதேச சபைகள் கொண்டுள்ளன. பெரும்பாலான பிரதேச சபைகளின் எல்லைப் பரப்புக்கள் அல்லது அதன் பகுதிகள் அபிவிருத்தியடைந்த பிரதேசமாக மாற்றமடைதல், சனத்தொகைப் பெருக்கம், பௌதீக வள அபிவிருத்தி, கல்வி மட்டம் உயர்வு இவை காரணமாக பிரதேசசபைகள் அதன் சேவைகளை விரிவாக்கம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தேவைகள், சேவைகளை விரிவாக்கம் செய்வதற்கு பிரதேச சபை நிதிவளம் போதுமானதாக இல்லை. இந்நிலையில் அபிவிருத்தி செயற்பாடுகளை ஈடேற்றிக் கொள்வதற்கு பிரதேச சபைகள் ஏற்புடைத்தான நிதி வளத்தை ஏற்படுத்துவது காலத்தின் தேவையும் அத்தியாவசியமானதும் ஆகும்.

**மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள**

- கோறளைப்பற்று பிரதேசசபை
- கோறளைபற்று மேற்குப் பிரதேசசபை
- ஏறாவூர்பற்றுப் பிரதேசசபை
- மண்முனைபற்றுப் பிரதேசசபை
- மண்முனை தென்எருவில் பற்றுப் பிரதேசசபை

ஆகிய பிரதேசசபைகளின் நடப்பு ஆண்டில் ஆதனவரி அறவீடு மேற் கொள்வதற்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. ந.சத்தியானந்தி அவர்கள் குறித்த சபைகளுக்கு உந்து சக்தியை அளித்து ஆலோசனைகளை வழங்கி படிமுறையான நடவடிக்கைகளை கண்காணித்தும் வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**பூர்வாங்க ஏற்பாடு**

**மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளல்.**

- மக்களின் அனுசரணையைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் விரும்பும் செயல்முறைகளைப் பெற்றுக் கொள்ளல் சிறந்த உபாய முறையாகும்.
- சிரமதானம், தொழில்நுட்ப அறிவு மற்றும் வளங்களின் உதவியை மக்களிடம் பெற்றுக்கொள்ளல் மக்கள் விரும்பும் குழுக்களை அமைத்தல்.
- சபை மேற்கொள்ளும் சேவைகளின் முன்னேற்றம் பற்றி மக்களுக்கு தெரியப்படுத்தல்.
- மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தித் திட்டங்கள், வரவு செலவு திட்டம்.
- வெளிப்படைத் தன்மையைப் பேணி மக்களின் நம்பகத் தன்மையை கட்டியெழுப்புதல்.

- ஆலோசனைச்சபை, வரியிறுப்பாளர் சங்கம், மத குருமார், மத வழிபாட்டுத் தலங்களின் தர்மகர்த்தாக்கள், தொண்டர் தாபனங்கள் ஆகிய கிராமிய மட்டத் தலைவர்கள் மத்தியில் ஆதனவரி அறவீட்டின் அவசியத்தை தெளிவுபடுத்தி மக்களின் அனுசரனையைப் பெற்றுக்கொள்வது! வரி அறவீட்டை மேற்கொள்வதற்கு இலகு நடவடிக்கையாக அமையப்பெறும்.
- சபைத்தீர்மானம் நிறைவேற்றல்
- ஆதனவரி அறவீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதேசத்தை அல்லது அதன் பாகத்தை அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுதலும், பிரகடனப்படுத்தலும்.(வர்த்தமானி மூலம்)

## சட்ட ஏற்பாடுகள்

### 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 134

1. பிரதேச சபைகள் அமைச்சரின் அங்கீகாரத்துக்கு அமைவாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் பிரதேச சபையால் கட்டமைத்த இடப்பிரதேசம் என பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள ஆதனங்களின் ஆண்டுப் பெறுமானத்தின் வீத வரியை அறவீடு செய்யலாம்.
2. இடப்பிரதேசங்களின் அல்லது பாகங்களின் அபிவிருத்தி மட்டத்தைக் கருத்தில் கொண்டு வெவ்வேறு இடப்பிரதேசங்களுக்கு வெவ்வேறு வீத வரிகளை அறவீடு செய்யலாம்.
5. முன்னரான ஆண்டின் வீத வரியை மாற்றமின்றி விதிப்பதற்கும், அறவிடுவதற்கும் அமைச்சரின் அங்கீகாரம் தேவையற்றதாகும்.
6. ஆதனவரியானது பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகின்ற காலங்களிலும் தவணைப் பணங்களிலும் செலுத்தப்படல் வேண்டும். (கந்தாயம்)
7. நடப்பு ஆண்டுக்கான ஆதனவரி சனவரி 31ம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட்டால் நூற்றுக்கு 10% கழிவு வழங்கப்படல் வேண்டும். தவணைப் பணமாக உரிய கட்டணம் உரிய காலப்பகுதியின் முதலாவது மாதத்தில் செலுத்தப்பட்டால் 5% கழிவீட்டை வழங்கலாம்.

## வரி விலக்களித்தல்

பிரிவு : 135 (அ)பொது வழிபாட்டு இடத்தின் காணிகளும் கட்டடங்களும் மத குருவின் வாழ் இடமாக ஒதுக்கப்பட்ட காணிகளும், கட்டடங்களும்.

(ஆ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பண்பாட்டு, சமூக, மத, தருமதாபனங்களின் கட்டடங்களும், காணிகளும்.

(இ) கட்டணம் அறவிடப்படாத கல்வி நிறுவனங்கள் அரச மானியம் பெற்ற அல்லது தற்போது பெற்றுக் கொண்டிருக்கும் கல்வி நிறுவனங்களால் முற்றாக அல்லது பிரதானமாகப் பயன்படுத்தப்படும் எல்லாக் காணிகளும் கட்டடங்களும்.

(ஈ) சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட நிலங்கள்.

(உ) வறுமை காரணமாக ஆதனத்தின் சொந்தக்காரருக்கு சபைத் தீர்மானம் மூலம் வரிநீக்கம்.

பிரிவு : 136 அரச ஆதனங்கள், அரசினால் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடப்பட்ட எல்லா வீடுகளும், கட்டடங் களும், காணிகளும், சிறுமனைகளும் மீது ஆதனவரி விதிக்கப்படல் வேண்டும்.

பிரிவு : 137 மேற்காட்டிய வரியை அறவி டுவதற்காக அரச ஆதனத்தை பிரதேச சபை கைப்பற்றவோ அல்லது விற்கப் படுதலுக்கோ உட்படுதல் ஆகாது.

பிரிக்கப்பட்ட ஆதனத்தை/ வீட்டை / கட்ட டத்தை தனியாகவோ முழுமையா கவோ வரி மதிப்பீடு செய்யலாம்.

கூட்டு உரிமையாளர் / வாடகை குடியி ருப்பாளருக்கு வரி அறிவித்தல் ஆண்டுப் பெறுமானத்தில் மதிப்பீடு செய்து கொடுக் கப்படுதல் வேண்டும்.

ஒன்று திரட்டுகை காரணமாக / பிரிவு கார ணமாக ஆண்டுப் பெறுமானத்தில் மாற்றம் ஏற்படுதல் ஆகாது.

## வரி மதிப்பீடு

பிரிவு : 139 (1) ஆதனவரி அறவீடு விதிக்க ப்படும் வீட் டின் கட்டடத்தின் காணியி ன் சிறுமனையின் ஆண்டுப் பெறுமான த்தை பிரதேச சபையால் அதிகாரம ளிக்கப்பட்ட ஆளெவரும் சூரியன் உதித்து மறைவதற்குள் –வீடுகள், கட்ட டம், காணி அல்லது சிறுமனையில் உட்புகுதலும் பரிசீலனை செய்வதும் அளவீடு செய்வதும் சட்டமுறையாதல் வேண்டும்.

(2) புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை /ஏற்கனவே இருந்த கட்டடத்தில் சேர்க்கப்பட்டமை பற்றி 14 நாட்களுக் குள் பிரதேசசபைக்கு எழுத்தில் அறிவி ப்பது ஆதனச் சொந்தக்காரரின் கட மையாதல் வேண்டும்.

(3) (அ) இதனகத்து குறித்துரைக்கப் படும் விபரத்திரட்டை எந்நாளன்று கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப் படுகின்றாரோ அந்நாளிலிருந்து ஏழு நாட்களுக்கு கொடுக்கத்தவறும் / அசட்டை செய்யும்.

(ஆ) தெரிந்து கொண்டு பொய்யான அல் லது செம்மையற்ற விபரத்தை அளிக் கின்றவரான அல்லது

(இ) ஆதனவரி அறவீட்டைத் தடுக்கின்ற அல்லது

(ஈ) “ஆ” பிரிவில் இணங்கி ஒழுகத்தவறுகி ன்ற ஆள் ஒவ் வொருவரும் 1000/= ரூபாவை மிஞ்சாத குற்றப் பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.

பிரிவு : 140 (1) புதிய ஆதனவரி மதிப்பீடு பிரதான வரி மதிப்பீட்டாளரால் அல் லது உள்ளூராட்சி உதவி ஆணையா ளரின் அங்கீகாரத்துடன் பிரதேச சபை யால் நியமிக்கப்பட்ட ஆட்களினால் மதிப்பீடு செய் யப்படுதல் வேண்டும்.

பிரிவு : 141 (3) பிரதேசசபையானது ஆண் டுப் பெறுமானத்தின் வரி மதிப்பீடு அறி வித்தல் சொந்தக்காரர் / வாடகைக் குடியிருப்பாளரிடம் சேர்ப்பித்தல் வே. ண்டும் அல்லது வளவில் விட்டு வைத் தல் வேண்டும் வரி மதிப்பீடு பற்றிய ஆட்சேபனைகள் சேர்க்கப்பட்ட தேதி யில் இருந்து 30 நாட்களுக்குள் பெற் றுக் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்தல் வேண்டும்.

(4) பிரதேச சபைகள் “ஆட்சேபனைப் புத்த கம்” ஒன்றை பேணி வருவதும் – ஆட் சேபனைகள் கிடைக்கும் பட்சத்தில் பரி சீலனை செய்வது பற்றிய எழுத்திலான அறிவித்தலும் கொடுத்தலும் வேண்டும்.

(5) ஆட்சேபனைகள் சொந்தக்காரர் / இருப்பாட்சியாளர் / அதிகாரமளிக்க ப்பட்ட முகவர் முன்னிலையில் நுண் ணாய்வு செய்யப்படல் வேண்டும் அத்த கைய நுண்ணாய்வு நியாயமான கார ணத்துக் காக ஒத்திவைக்கப்படலாம்.

பிரிவு : 144 பிரதேச சபையானது ஏதே னும் வரி மதிப்பீட்டை போதிய ஏதுக் கள் இருப்பின் மீளாய்வு செய்வதற் கும், அதிகரிப்பதற்கும், குறைப்பதற் கும் எத்தேதியிலிருந்து அமுலாக்கம் செய்வதற்கும் அதிகாரத்தையும் தத்து வத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) ஆட்சேபனை பற்றிய நுண்ணாய்வு அறிக்கையினை உரியவர்களுக்கு சேர்ப்பிப்பதுடன் ஏற்புடையதாயின் வரிமதிப்பீட்டில் உரிய மாற்றங்களும் காலமும் செயல்படுத்தலும் வேண்டும்.

(6) வரி மதிப்பீட்டுக் கெதிராக ஆட்சேபனைகள் எழுப்பப்படவில்லையாயின் மதிப்பீடு உரிய காலத்துக்கு வலுவுடையதாகும்.

## வரிக்குறைப்பு

பிரிவு : 145(1) தளபாடங்களை கொண்டுள்ள கட்டடம் தவிர்ந்த வாடகைக் குடியிருப்புக்கு உட்பட்ட கட்டடம் வாடகைக்கு விடப்படாதிருப்பின் அக்காலப்பகுதிக்கு ஆதன வரி வரிக்குறைப்பு விகிதாசார அடிப்படையில் வழங்கப்படலாம்.

(2) தளபாடங்கள் கொண்டதாகவும் தளபாடமிடப்பட்ட தாகவும் கட்டடம் கட்டப்பட்ட கட்டடமொன்று வாடகை நோக்கில் கட்டப்பட்டு பிரதேசசபையுடன் பதிவு செய்யப்பட்டுள்ள கட்டடமொன்று தொடர்பாக வாடகைக்கு விடப்படாத காலப்பகுதிக்கு அரைவாசியான வரிக்குறைப்பு செய்யப்படலாம்.

(3) பிரதேசசபையால் எழுத்திலான அறிவிப்பு வரிக்குறைப்பு செய்யப்பட்டு இருப்பாட்சி செய்யப் படுகின்ற திகதியில் முடிவுறுதல் வேண்டும்.

(4) சொல்லப்பட்ட திகதியில் மீள்வாடகை குடியிருப்பு செய்யப்பட்டு மூன்று நாட்களுக்குள் பிரதேச சபைக்கு அறிவித்தல் கொடுக்கப்படாவிட்டால் ஒரு மாதத்திற்கு முன்னரான தேதியில் முடிவுறுதல் வேண்டும்.

(5) வாடகைக் குடியிருப்புக் கட்டடம் வாடகைக் குடியிருப்புக்கு விடப்படாது அல்லது தொடர்ந்து இருக்கின்றதோ இவ்விடயத்தில் பிரதேசசபையின் முடிவு இறுதியாதலும் வேண்டும்.

பிரிவு : 146 பிரதேச சபையானது பொதுவாக அல்லது சிறப்பாக அமைச்சரால் பணிக்கப்படும் போது மாத்திரமே முன்னைய புதியவரி மதிப்பீடுகளை அல்லது சரிபார்த்தல்களை ஏற்றுக் கொள்ளும் சபையானது முன்னைய ஆண்டின் வரிமதிப்பீட்டை அல்லது சரிபார்ப்பை அல்லது குறித்த விடயங்களின் அவசியமான மாற்றங்களுடன் அடுத்து ஆண்டுக்கான வரிமதிப்பீடாக புதிய வரிமதிப்பீடு அல்லது சரிபார்ப்பு நிறைவேறும் வரை இசைவாக்கிக் கொள்ளும்.

## ஆதனவரி அறவீடு

- வருடாந்தம் வருடத் தொடக்கத்தில் அல்லது முன்னர் முடிவடையும் ஆண்டின் இறுதியில் ஆதனவரி செலுத்த வேண்டிய காலம், கழிவுகள் தண்டப் பணம் ஆகிய விபரங்களும் பொது மக்களுக்கு அறிவித்தல் செய்தல் (வர்த்தமானி, பத்திரிகை)
- ஆதனச் சொந்தக்காரருக்கு வருடாந்தவரி அறிவித்தல், சேர்ப்பித்தல்.
- ஆதன இடாப்பு உரிய விவரணங்களுடன் (Dis cription) நிரல்களுக்கான போதிய இடைவெளிகளுடன் பேணுதல்.
- வருமானவரி பதிவேடு பி.ச.23 பேணுதல்.
- நிலுவைகளுக்கு உரிய தண்டப்பணம் விதித்தல்.
- ஆதனத்தை கைப்பற்றுகை, விற்பனை (அசைவுள்ள அசைவற்ற ஆதனம் (பிரிவு 158 (1) (அ) (ஆ) உப பிரிவுகள் மற்றும் பிரிவுகளும்.)
- நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடுக்கட்டல் உத்தியோகத்தர்களை நியமித்தல் (சேகரிப்பாளர்)
- நடுக்கட்டல் உத்தியோகத்தர்களிடம் பிணைப்பணம் அறவிட்டு வைப்புக் கணக்கிலிடல்.

- நிலுவைகளை அறவிட நடுக்கட்டல் உத்தியோகத்தர்களிடம் உரிய பற்றுச் சீட்டுப்புத்தகம், நிரல்கள் அட்டவணைப் புத்தகம் (Schedule) நிலுவைப் பட்டியல், சிவப்பு நோட்டீஸ் (Red Notice) வழங்குதல்.
- நடுக்கட்டல் உத்தியோகத்தர்கள் நிலுவைகளை மட்டுமே அறவீடு செய்ய முடியும் நிலுவை பகுதிக் கொடுப்பனவு அறவீடு செய்தலாகாது.
- நிலுவைகள் அறவீட்டுக்கு நடுக்கட்டல் உத்தியோகத்தர்கட்கு தரகுப்பணம் வழங்குதல்.
- நடுக்கட்டல் உத்தியோகத்தர்கட்கு நடுக்கட்டல் நடவடிக்கையின் போது கைப்பற்றுகை, தவிர்க்கப்பட வேண்டிய பொருட்கள் தந்திரரோபாயங்கள்பற்றி அறிவுரை வழங்குதல் கைப்பற்றுகை தவிர்க்கப்பட வேண்டியவை குடும்பத்தினரின் ஆடை அணிகலன்கள், சமையல் பாத்திரங்கள், படுக்கைகள், கட்டில்கள், வாழ்க்கைத் தொழிலைக் கொண்டு நடாத்தும் உபகரணங்கள் அத்தகைய கால் நடைகளும் விதைத் தானிடமும் 500/- ரூபா பெறுமதி வரை உயர் தொழில் / தொழில் சாதனங்களும், நூலகப்புத்தகங்களும் பிரிவு 160 (ஆ) (ஆ) (இ).

ஆதனவரி அறவீடு சிறப்பாக அமுலாக்கம் செய்வதற்கு சபையின் தவிசாளர், சபை உறுப்பினர்கள், செயலாளர் உட்பட பதவியணியினர் வரியிறுப்பாளர்கள் முன்வருவது அத்தியாவசியமானதாகும்.

"இத்தொகுப்பானது நீண்ட காலமாக ஆதனவரி எழுதுனராகவும், பிரிவுத் தலைவராகவும் கடமையாற்றி தற்போது தலைமையக சனசமூக அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றும் திரு.வே.முருகமூர்த்தி அவர்களால் தொகுக்கப்பட்டதாகும்"

தொகுப்பு : அன்பழகன் குரூஸ்

(சனசமூக அபிவிருத்தி அலுவலரும், சிறப்பு மலராசிரியரும்)



**அம்பிளாந்துறை நாவலர் வீதி தொடர்பான மக்களின் கருத்து.**

பாலிப்போடி தேவராஜன் வயது 60 ஆகிய நான் கூறிக் கொள்வதாவது குறிப்பிட்ட அம்பிளாந்துறை வீதி கொங்கிறீட் வீதியாக மாற்றமடைவதற்கு முன்னர் பொதுமக்கள் இவ் வீதியை மிகவும் சிரமத்திற்கு மத்தியில் பயன்படுத்தி வந்தனர் மேலும் இவ் வீதியை பயன் படுத்தும் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள், விவசாயிகள் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் இவ் வீதியை பயன்படுத்தி வந்தனர். தற்போது இவ்வீதி புறநெகும திட்டத்தினுடாக பிரதேச சபையால் கொங்கிறீட் வீதியாக மாற்றி அமைக்கப்பட்டு பொதுமக்களின் பாவனைக்காக விடப்பட்டுள்ள நிலையில் இவ் வீதியை பயன்படுத்தும் மக்கள் தங்கள் போக்குவரத்தின் போது ஏற்பட்ட கஷ்டங்கள் இப்போது பிரதேச சபையால் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# உள்ளூராட்சி மகுடம்

ஊரெல்லாம் சிறக்க உண்மைப் பணிசெய்தவர்கள்
யாரெல்லாம் ஊரென்ற நல்லதொரு சேதியினை
ஊரெல்லாம் பரப்பவரும் உள்ளூராட்சி மகுடமே - உனை
பாரெல்லாம் பறையொலிக்க பாஓதி வாழ்த்துகிறோம்.
பாராட்டும் உன்பணியை பணிந்து நின்று போற்றுகிறோம்.

உண்மைப்பணி ஊக்கமென்று எம்மனதில் நீவருவாய்
உன்னையொரு ஊக்கமென்று உளமுணர வழிதருவாய்
எண்ணமதில் வண்ணமதாய் எம்மனதில் நீ மலர்ந்து
இன்னொருநாள் உன்மகுடம் என்னுடையதாக வைப்பாய்.

நாவறண்ட மக்களுக்கு நன்னீரைக் கொண்டுசென்று
தா என்று சொல்லுமுன்பே தண்ணீரைக் கொடுக்கின்ற,
கான் அடைத்து நின்றால் கழிவுநீர் ஓடாமல்
கைகொண்டு கழிவை கடமையென்று எடுக்கின்ற,
கடையோரம் இறந்த கட்டக்காலி நாயை
களவின்றி மனதில் கட்டியேற்றிச் செல்கின்ற
கடமையினை செய்கின்ற கருணைகொண்ட சேவகர்ட்டு
உரிமையோடு விழுகின்ற உள்ளூராட்சி மகுடமிது

வீட்டினிலே குப்பைவிழும் வீதியிலும் குப்பை வரும்
சாக்கடையில் நீர் தேங்கி சட்டனவே நுளம்பு வரும்
றோட்டினிலே மாடுகளால் தொல்லையென்று போனும் வரும்
இத்தனையும் பார்த்து இவற்றையெல்லாம் சுத்தமாக்கி
மக்களுக்கு சேவை செய்யும் மனிதர்க்கான மகுடமிது

பாதைகளை செப்பனிட்டும் பதாதைகளில் பெயருமிட்டும்
வீதிவழிச்சாலை யெங்கும் மின்சாரக்கம்பமிட்டும்
சேமக்காலை செப்பனிட்டு செம்மையான வேலியிட்டும்
சேவைப்பணி செய்தவர்க்கு சிரத்தில் விழும் மகுடமிது

மைதானம் சீரமைத்து மழலைகட்டு பாக் அமைத்து
நுண்ணறிவு பெருகிடவே நூல்நிலையம் கூடமைத்து
வண்ணவண்ண புத்தகமும் வளம்நிறைந்த நாளேடும்
வாசகர்கட்கு அளிப்போரை வாழ்த்துகின்ற மகுடமிது

உள்ளூராட்சி மகுடம் உழைத்தவர்க்ள தலையில் விழ
உள்ளுணர்வில் முடிவெடுத்த உன்னத முதல்வருக்கும்
உறுதுணையாய் இருந்து மதியுரைத்த கவர்னருக்கும்
நிறைவேற்ற வழிசமைத்த முதல்வரின் செயலாளர்க்கும்
உறுதியோடு நெறிப்படுத்தும் உள்ளூராட்சி ஆணையாளர்க்கும்
உடனிருந்து உதவிசெய்த உதவி ஆணையாளர் அவர்களுக்கும்
உள்ளமெலாம் ஒன்றுசேர ஒருகோடி வந்தனங்கள்.

T.பேரின்பராசா
கவிஞர்
மண்முனை தென்மேற்கு பிரதேச சபை
கொக்கட்டிச்சோலை



கோறளைப்பற்று பிரதேச சபையினால் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் சந்திவெளியிலிருந்து பாலையடித்தோணா வரையாக நிர்மாணிக்கப்பட்ட வீதி தற்போது பொது மக்களுக்கும், மீன் வியாபாரிகளுக்கும் மிகுந்த பயன் தருவதாக அறிய முடிகின்றது.



ஏறாவூர் நகர சபையினால் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் ஹர அகர சனசமூக நிலையத்தின் நேரடி ஒப்பந்தம் மூலம் நிர்மாணிக்கப்பட்ட மக்காமடி வீதியின் அல் அஸ்கர் பாலம் தற்போது பொது மக்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் மிகுந்த பயன் தருவதாக அறிய முடிகின்றது.



புறநெகும செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டுவரும் மாங்கேணி கிருமிச்சை இணைப்பு வீதி எப்பொழுது முடிவுறும் என விவசாயிகளுக்கும் பொது மக்களும் எதிர்பார்த்திருக்கின்றனர். மூன்று கட்டங்களாக திட்டமிடப்பட்ட இவ் வீதியின் இரண்டாம் கட்டம் ஆரம்பித்துள்ள நிலையில் மூன்றாங் கட்டமும் முடிவுற்றால் மட்டுமே முழுமையான பயனை மக்கள் அடைய முடியும் என பிரதேச வாசிகள் கூறுகின்றனர்.



ஏறாவூர்பற்று பிரதேச சபையினால் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் வந்தாறுமூலையில் நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டிடம் தற்போது நிர்மாணிப்பு வேலைகள் முடிவுற்று மக்கள் பயன்பாட்டுக்குத் தயாராயுள்ளது.

# மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டமிடலும் மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றங்களின் படிப்பினைகளும்

வ.தேவநேசன்
சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
உள்ளூராட்சித் திணைக்களம்,
மட்டக்களப்பு.

**திட்டமிடல் என்பது:**

திட்டமிடல் என்பது நாம் விரும்புகின்ற ஒரு எதிர்காலத்தை உருவாக்கும் பொருட்டு எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகளை நெறிப்படுத்துகின்ற செயன்முறைகள் அடங்கிய ஆவணமாகும். இங்கு நாம் தற்போது இருக்கின்ற நிலையிலிருந்து எதிர்காலத்தில் எவற்றை அடைய வேண்டும் என்ற இலக்கினை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகள் முன்னெடுக் கப்படுகின்றன. இதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்? எப்போது, எங்கு, யாரால், எவ்வாறு செய்யப்பட வேண்டும் எனும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்ப டுகின்றது.

**பிரதேசமட்ட திட்டமிடல்:**

பிரதேசமட்டத்திலான அபிவிருத்தி திட்டத்தினை மேற்கொள்ளும்போது அப்பிரதேசத்திலுள்ள பல்வேறு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. பிரதேசத்தின் இடப்பரப்பு, சனத்தொகை அங்கு கிடைக்கக்கூடிய வளங்கள், காலநிலை என பல்வேறு காரணிகள் இதில் சம்பந்தப் படுகின்றன. இவற்றினை அடிப்படையாக கொண்டே உள்ளூர் மட்டத்திலான அபிவி ருத்தி திட்டமிடலில் ஆலோசனைக் குழுக்களூடாக மக்களின் ஆலோசனையைப் பெற்று மேற்கொள்ளும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படு கின்றது. இது நகர சபைக் கட்டளைச் சட்டம் 29ஆம் பிரிவிலும் பிரதேச சபைச் சட்டத்தின் 12ஆம் பிரிவிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை இலக்கம் 10 இல் "உள்ளூராட்சி மன்றமும் சமூகப் பங்களிப்பும்" என்ற தலைப்பில் "உள்ளூராட்சி மன்றங்களால் பணிகளைத் திட்டமிடும்போதும் அமுல் படுத்தும்போதும் மக்களுடன் இணைந்து செய்யப்பட வேண்டும் என சிபார்சு செய்யப் பட்டுள்ளது.

ஏனெனில் உள்ளூர் மட்டத்தில் தமது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேச வளங்களிலும் மக்களிலும் கூடிய அக்கறை/அதிகாரம் கொள்ளும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி தன்னகத்தே கொண்டுள்ள இந்த "குட்டி அரசாங்கம்" எனப்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கு இது மிகவும் பொருத்தமான்தாகவும் அமைகின்றது.

**கடந்தகால திட்டமிடல்களின் படிப்பினைகள்:**

கடந்த காலங்களில் இவ்வாறான அபிவிருத்தி திட்டமிடல்கள் பல்வேறு துறையினராலும் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வந்துள்ளன. இவை மேல்மட்டத்திலும் அலுவலக மட்டத்திலும் தரவுகள் பெறப்பட்டு அவை பகுப்பாய்வு செய்யப்பட்டு திட்டமிடல் நுட்பங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி திட்டமிடல்கள் தயாரிக்கப்பட்டு கிடைக்கப்பெறுகின்ற நிதி வளத்துக்கு ஏற்ப இவை நடைமுறைப்படுத்தப்பட்டும் உள்ளன.

எனினும் இவை தற்காலத்தில் எதிர்பார்க் கப்படுகின்ற எதிர்கால சந்ததியினரையும் இலக்காக கொண்டதான நிலைத்திருக் ககூடிய அபிவிருத்தி திட்டங்களா என்பது கேள்வி குறியாகும். அத்துடன் இவ்வாறாக தயாரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சில அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மக்களால் பயன்படுத்தப்படாமல் பயனற்று கிடப்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக சில அரச சார்பற்ற நிறுவனங் களின் அனுசரனையுடன் மேற்கொள்ளப்பட்ட பலநோக்கு கட்டிடங்கள், மலசலகூடங்கள் போன்றவற்றுக்காக செலவிடப்பட்ட நிதி மற்றும் ஏனைய வளங்கள் பயனற்றுப் போயுள்ளன.

### கீழிருந்து மேல்நோக்கிய திட்டமிடலும் மக்கள் பங்களிப்பின் தேவையும்:

திட்டமிடலானது அலுவலக மட்டத்தில் மேற்கொள்ளப்படும்போது அத்திட்டத்தின் அமுலாக்கலில் பல பிரச்சினைகள் எழுந்த துடன் அத்திட்டம் தோல்வி நிலையையும் தழுவியது. இத்தோல்விகள் அக்கிராமத்தி னுடைய பயனாளிகளான மக்களின் உண்மைத் தேவைகள் இனங்காணப்படாமல் திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டமையினா லேயே ஏற்பட்டன என சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எனவேதான் கடந்த காலங்களில் சில செயற்றிட்டங்களின் தோல்விகளால் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட பிரதேச அபிவிருத்தித் திட்டமிடலின்போது குறிப்பிட்ட செயற்திட்டத்தைப் பயன்படுத் துகின்ற பங்குதாரருடன் இணைந்தே திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இதனை கருத்தில் கொண்டே கீழிருந்து மேல் நோக்கிய அடிப் படையிலான மக்களுடன் இணைந்ததான மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுவது சிறந்ததெனக் கருதப்பபட்டது.

### பங்களிப்பு என்பது:

ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் அனைத்து சமூகத்தினரையும் இணைத்த வகையில் ஆலோசனை பெறல், திட்டமிடல், தீர்மானமெடுத்தல், கொள்கைகளை உரு வாக்கல் போன்ற செயற்பாடுகளை உள்ள டக்கியதாகும். இங்கு ஆண், பெண், சிறுபான்மை, பெரும்பான்மை, ஏழை, பணக்காரர், படித்தவர், எழுத்தறிவு இல்லாதவர், மதம், மொழி, இனம் என்ற பேதமில்லா மல் நிறுவனத்தின் அபிவிருத்திச் செயற்பா டுகளை முன்னெடுக்கின்ற வழிமுறையாகும். இங்கு பங்களிப்பானது தொடர்புடைய அனைவரும் ஆலோசனை வழங்குவதா கவோ, கருத்துக்களைத் தெரிவிப்பதாகவோ, உடல் உழைப்பை வழங்குவதாகவோ அத்துடன் கண்காணித்து அறிக்கை சமர்ப் பித்தல், அனுசரணை வழங்குதல், இணைந்த செயற்பாடுகள் போன்றனவற்றில் எதுவாக வும் இருக்கலாம்.

### பங்களிப்பு மனப்பாங்குகள்:

திட்டமிடலுக்கான பங்களிப்பைப் பெறுகின்ற திட்டமிடலாளர்கள் பின்வரும் மனப்பாங் கைக் கொண்டிருக்க வேண்டும்.

- ☞ அனைவரது கருத்துக்களையும் உள்வாங்குதல்.
- ☞ விடயங்களை வெளிக்கொணரத் தூண்டுதல்.
- ☞ ஈடுபாட்டை அதிகரித்தல்
- ☞ வசதிப்படுத்திக் கொடுத்தல்.

- ☞ வெளிப்படைத்தன்மையாக இருத்தல்.
- ☞ மற்றவருடைய கருத்துகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் மதிப்பளிப்பவராக இருத்தல்.
- ☞ அனைவரையும் பங்குபற்றச் செய்தல்.

**பங்களிப்பு உத்திகள் / கருவிகள்**

- ☞ பங்காளர்களூடாகவே கருத்துகளைப் பெற்று முடிவுகளைப் பெறக் கூடியதாக இருக்க வேண்டும்.
- ☞ செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லலும் மாற்றங்களுக்கான விவாதங்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கலும்.
- ☞ மீளவும் மீளவும் விடயங்களைப் பகுப்பாய்வு செய்து தகவல்களை உறுதிப்படுத்தல்.
- ☞ பல்வேறு மட்டத்திலான செயற்பாடுகளில் கண்காணிப்பை மேற்கொள்ளல்.
- ☞ மிகச் சரியாகவோ/எதிர்பார்த்தளவோ செய்ய முடியாவிட்டாலும் முடிந்தளவு சரியாக உரிய காலத்தினுள் நிறைவேற்றல்.
- ☞ விடயங்களைப் பெரும்பாலும் காட்சிப் படுத்தலூடாகவே முன்வைத்தல்.
- ☞ குழுப்பகிர்வுக்கும் கற்றலுக்கும் முன்னுரிமை அளித்தல்.
- ☞ ஏற்கனவேயுள்ள அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளல்.

**பங்குபற்றல் அணுகுமுறைகள்:**

1. Rapid Rural Appraisal (RRA)

   இது குறுகிய காலத்தில் அனைவரையும் ஓரிடத்தில் திரட்டி விரைவாகவும் செலவு குறைவாகவும் திட்டமிடல் தயாரிக்கின்ற முறையாகும்.

2. Participatory Rural Appraisal (PRA)

   இது ஒரு தொடர் திட்டமிடல் செயற்பாடாகும். அத்துடன் கிராமிய திட்டமிடலுக்கான உள்ளூர் அறிவுத் திறன்களை ஊக்குவிக்க வலியுறுத்தும் ஒரு செயற்பாடாகும்.

3. Participatory Poverty Assesment (PPA)

   வறுமை தொர்பான விளக்கத்தை பங்காளர்களின்/மக்களின் உண்மையான நிலையிலிருந்து ஆய்வு செயயும் திட்டமிடல் இதுவாகும்.

4. Participatory Action Research (PAR)

   பங்காளர்களை வலுப்படுத்து வதனூடாகவும் அவர்களைத் தரமுயர்த்துவதனூடாகவும் மேற்கொள்ளப்படும் திட்டமிடல் இதுவாகும்.

5. Appreciative Inquiry

   தனிப்பட்ட சமூகத்தின்/நிறுவனத்தின் கடந்த கால திட்டமிடல்களிலிருந்து பெற்ற வெற்றிகளை ஆய்வு / விசாரணை செய்து எதிர்கால வெற்றிகளுக்கு திட்டமிடுகின்ற முறை இதுவாகும்.

இவ்வாறு பங்கு பற்றலில் பல்வேறு அணுகுமுறைகள் கையாளப்படு கின்றது. எனினும் பிரதேசத்தினதும் சமூகத் தினதும் நிலைமைகளைக் கருத்தில் கொண டே எந்த அணுகுமுறையைப் பின்பற்றுவது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

## பங்களிப்புடனான அபிவிருத்தி திட்டமிடல் என்பது:

மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி திட்டமிடல் என்பது மக்களைப் பங்காளர் களாகவும் அனைவரையும் சமமாகவும் திட்டமிடலில் உள்வாங்கும் ஒரு முறை யாகும். இங்கு திட்டமிடலில் மட்டுமன்றி ஒரு செயற்திட்டத்தின் செயன்முறையின் (Project Cycle) ஒவ்வொரு படிமுறை யிலும் மக்கள் பங்களிப்பு பெறப்படுவது ஒரு விசேட அம்சமாகும். அதாவது கருத்திட்டங் களை அடையாளங்காணல், திட்டமிடலைத் தயாரித்தல், அமுல்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீடு என ஒவ்வொரு படிமுறையிலும் மக்கள் பங்களிப்பு இடம்பெறும்.

## பங்களிப்புடனான திட்டமிடல் தயாரிக்கப்படும் முறை:

பங்களிப்புடனான கிராமிய மட்டத்திலான திட்டமிடல் ஒன்றை தயாரிக்க முற்படும் போது குறிப்பிட்ட கிராம மக்க ளுடன் இணைந்து கலந்துரையாடல்களை மேற் கொள்வதன் மூலமோ வெவ்வேறு முறை மைகள் மூலமோ தகவல்களை அறிவதற்காக திட்டமிடல் குழுவினர் அக்கிராமத்துக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள பல்வேறு வளங்களை அடையாளங் காண்பதுடன் திட்டமிடலுக்குத் தேவையான அனைத்துத் தரவுகளையும் பெற்றுக் கொள்வர்.

### *1. பிரச்சினைகளை இனங்காணல்:*

இங்கு அக்கிராமத்தின் தேவைகள்/ பிரச்சனைகள் இனங்காணப்படும். அக்கி ராமத்தில் உண்மையான தேவைகள் எவை என்பது அக்கிராம மக்களைக் கொண்டே அடையாளம் காண்பது இதுவாகும்.

### *2. பிரச்சினைகளை முன்னுரிமைப் படுத்தல்:*

இவ்வாறு இனங்காணப்படும் பிரச்சினை களில்/தேவைகளில் மிகவும் முக்கியமானது எது என்பதை அடையாளம் காண்பதற்காக அப்பிரதேச மக்களைக் கொண்டே அவை முன்னுரிமைப்படுத்தப்படும். அதாவது அடை யாளப்படுத்தப்பட்ட தேவைகளில் முதலில் நிறைவேற்றப்படவேண்டிய தேவை அல்லது தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை என்ன என்பதன் அடிப்படையில் அவை வரிசைப் படுத்தப்படும்.

### *3. கருத்திட்டங்களை அடையா ளங் காணல்:*

முன்னுரிமைப்படுத்தப்பட்ட பிரச்சினைக ளுக்குரிய உண்மையான காரணத்தை அறிந்து அவற்றுக்கான கருத்திட்டங்கள் அடையாளம் காணப்படும். இவையும் மக்களைக்கொண்டே தீர்மானிக்கப்படும். உதாரணமாக அடையாளம் காணப்பட்ட கருத்திட்டம் வீதி அமைத்தல் எனில் அது கிறவல் வீதியா அல்லது கொங்கிறீட் வீதியா என்பது. இவ்வாறு அவர்களுடன் இணைந்தே தீர்மானிக்கப்படும்.

### *4. உத்தேச மதிப்பீடு தயாரித்தல்:*

அடையாளம் காணப்பட்ட கருத்திட் டங்களுக்கான உத்தேச மதிப்பீடு திட்டமிடல் குழுவினரால் மதிப்பிடப்பட்டு அது எவ்வளவு தொகையென திட்டமிடலில் உள்வாங்கப்ப டும்.

### *5. பெறக்கூடிய நிதிமூலங்களும் மக்களுடைய பங்களிப்பும்:*

இங்கு அடையாளம் காணப்பட்ட கருத்திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட நிதியை பெறக்கூடிய நிறுவனங்கள் உத்தேசிக்கப்பட்டு திட்டமிடலில் அடையா ளப்படுத்தப்படுவதுடன் அல்லது சிபார்சு

செய்யப்படுவதுடன். விசேடமாக அவற்றில் மக்கள் பங்களிப்பு செய்யக்கூடிய விடயங்கள் என்ன என்பது இனங்கா ணப் பட்டு அவற்றுக்குரிய மதிப்பீடும் தனியாக காட்டப்படும். அதுமட்டுமன்றி இவ்வாறு மதிப்பிடப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட வேலைகள் குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்தின் அமுலாக்களின் போதும் இம்மக்களின் பங்களிப்பு உறுதிப்படுத்தப்படும்.

இதனால் குறிப்பிட்ட செயற்றிட்டத்தில் மக்களின் ஆர்வமும் ஈடுபாடும் காணப்படுவதுடன் அச்செயற்றிட்டம் தங்களுடையதுதான் என்ற உரிமைத்துவம் (Ownership) உருவாகும். இது செயற் றிட்டத்தின் தொடர்ச்சியான வெற்றிக்கும் நிலைத்திருக்கும் தன்மைக்கும் வழிவகுக் கும்.

### *6. செயற்பாட்டு திட்டமும் அமுல் படுத்தலும்: (Activity Plan)*

இவ்வாறு பெறப்படக்கூடிய பங்களிப்பை கொண்டு குறிப்பிட்ட செயற்திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளும் எவ்வளவு காலத்தினுள் செயற்படுத்தப்படுவது என்பதுவும் திட்டமிடப்படும். அத்துடன் இந்த ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் பொறுப்பானவர்கள் யார் என்பதுவும் காட்டப்படும்.

### *7. கண்காணிப்பும் மதிப்பீடும்:*

குறிப்பிட்ட திட்டமிடல் நடைமுறைப்படுத்தப்படும் போதும் அவற்றின் பின்னரும் அவற்றை யார் கண்காணிப்பர்? என்பதுவும் எவ்வாறு மதிப்பீடு (Evaluation) செய்வது? அதை யார் செய்வது? என்பதுவுமே இதுவாகும்.

### *8. பராமரிப்பும் தொடர்ச்சித் தன்மையும்:*

குறிப்பிட்ட செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டு அவை மக்கள் பாவனைக்கு விடப்பட்டதும் அவற்றை தொடர்ச்சியாக பராமரிக்க வேண்டியது பொதுமக்களின் கடமையாகும். அப்போதுதான் அதன் நிலைத்திரு தன்மை உறுதிப்படுத்தப்படும். இதுவும் திட்டமிடலில் உள்ளடக்கப்பட்டு மக்களின் பங்களிப்பும் பொறுப்பும் வலியுறுத்தப்படும்.

இவ்வாறு திட்டமிடலின் ஒவ்வொரு கட்டத்திலும் மட்டுமின்றி அவை நடைமுறைப் படுத்தப்படும் போதும் செயற்றிட்டம் முடிவ டைந்த பின்னரும் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்ற விடயங்களை உள்வாங் கியே இம்மக்கள் பங்களிப்புடனான திட்ட மிடல் தயாரிக்கப்படும்.

**பங்களிப்புடனான திட்டமிடலின் நன்மைகள்:**

- ☞ அனைவரிடையேயும் ஐக்கியம், ஒருமைப்பாடு, கூட்டிணைவு என்பவற்றை அதிகரிக்கலாம்.
- ☞ சமூகமும் அரசியலும் வலுவூட்டப்படும்.
- ☞ உள்ளூர் வருமான அதிகரிப்புக்கும் தரமான வாழ்க்கைக்கும் வழிவகுப்பதனால் பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.
- ☞ செய்யப்பட்டவற்றில் பின்னடைவுகள் இருப்பினும் மக்கள் தங்களது சொந்த அனுபவங்களிலிருந்து மேலும் கற்றுக் கொள்வர்.
- ☞ மேற்கொள்ளப்பட்ட திட்டமிடலில் தன்னிறைவும் சந்தோசமும் கிடைக்கும்.

**மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களினூடாக கடந்த காலங்களில் தயாரிக்கப்பட்ட மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டங்கள்:**

- **1998 இல் கிராமிய மட்டத்திலான அபிவிருத்தித் திட்டம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டங்கள் முதன் முதலில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களான கோறளைப் பற்று பிரதேசசபை, ஏறாவூர் பற்று பிரதேச சபை, ஏறாவூர் நகரசபை, மண்முனை மேற்கு பிரதேசசபை, மண்முனை தென் மேற்கு பிரதேசசபை, போரதீவுப்பற்று பிரதேசசபை ஆகிய 6 உள்ளூராட்சி மன்றங்களின் தெரிவுசெய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி 2008ஆம் ஆண்டு ஒரு ஆரம்ப / பரீட்சார்த்த (Pilot) செயற்றிட்டமாக மேற்கொள்ளப்பட்டது. இது கிழக்கு மாகாணத்திலேயே முதன்முதலாக செய்யப்பட்ட மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இது கிராமிய ஒருங்கிணைந்த நீர் வழங்கல், உடல்நல மற்றும் சுகாதார (Rural Integrated Water Sanitation and Hygiene – RIWASH) செயற்திட்டத்தின் கீழ் ஆசிய மன்றத்தினதும் உலகதரிசன (World Vision) நிறுவனத்தினதும் ஒருங்கிணைந்த வழிகாட்டலுடனும் தொழிநுட்ப அனுசரணையுடனும் செயற்படுத்தப்பட்டது. இதற்காக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரை மாவட்ட இணைப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்காக இணைக்கப்பட்டிருந்த சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பிரதேச இணைப்பாளர்களாவும் கொண்டு இந்த அபிவிருத்தித்திட்டம் தயாரிக்கப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. 3 மாதத்தினுள் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் நோக்கில் பிரதேச இணைப்பாளர்கள் தமது வழமையான கடமைகளுடன் இந்நடவடிக்கையையும் முன்னெடுத்தனர்.

இதற்காக கிராமிய ரீதியாகவும் உள்ளூராட்சி மன்ற ரீதியாகவும் திட்டமிடல் குழுக்கள் உருவாக்கப்பட்டன. கிராமிய ரீதியான திட்டமிடல் குழுவில் குறிப்பிட்ட கிராமத்தில் இனங்காணப்பட்ட சமூக மட்ட தலைவர்கள், தகவல்களை வழங்குவோர் மற்றும் முன்மாதிரியானோர் என ஒரு கிராம சேவகர் பிரிவில் குறைந்தது 5 பேர் அடங்கியதாக இது அமைந்தது. இதேபோல் பிரதேச மட்டத்திலும் திட்டமிடல் குழு உருவாக்கப்பட்டது. உள்ளூராட்சி மன்ற முதல்வர்/தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், அலுவலக உத்தியோகத்தர்களில் சிலர் (திட்டமிடல் பிரிவினர்) அத்துடன் கிராமிய மட்ட பிரதிநிதிகள் ஏனைய தொடர்புடையோர்கள் என பல்வேறு தரப்பினர்களை உள்ளடக்கியதாக இப்பிரதேசமட்ட திட்டமிடல் குழு அமைந்தது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட கிராமிய மட்ட திட்டமிடல் குழுக்களுடன் பிரதேச மட்டத்திட்டமிடல் குழுவினரும் இணைந்து கிராமந்தோறும் நேரடியாக விஜயம் செய்து இரண்டு கட்ட கலந்துரையாடல் மூலம் போதிய தகவல்களைப் பெற்றுக்கொண்டனர். விசேடமாக கிராமத்தின் பிரச்சினைகளை நேரடியாக மக்கள் மூலமே இனங்கண்டு அவர்கள் மூலமே முன்னுரிமைப் படுத்தப்பட்டது. பின்னர் இவற்றுக்கான கருத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு இதன் உத்தேச மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு கிராமிய மட்ட திட்டமிடலில் உள்வாங்கப்பட்டன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட கிராமிய மட்ட திட்டம் அனைத்தும் ஒன்றி

ணைக்கப்பட்டு பிரதேசமட்ட திட்டம் தயாரிக் கப்பட்டு பிரதேச அடிப்படையிலான அதிகார பூர்வமான திட்டமிடல் ஆவணமாக அது திகழ்ந்தது. அதுமட்டுமன்றி அப்போது உள்ளூ ராட்சி மன்ற எல்லையினுள் பணிபுரிந்து கொண்டிருந்த பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு இலகுவாகவும் அவர்கள் எதிர் பார்த்தளவு முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு இந்த மக்கள் பங்களிப்புட னான அபிவிருத்தி திட்டமிடல் விளங்கியி ருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

- **2010ஆம் ஆண்டு கொத்தணி அடிப் படையிலான அபிவிருத்தி திட்டம்:**

வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்படுத்தல் செயற்றிட்டம் (NELSIP) இல் உள்ளூராட்சி மன்றங்களை உள்வாங்கு வதற்கான அடிப்படைத் தகுதியை (Eligibility criteria) நிறைவேற்றும் நோக்கில் இப்பங்களிப்பு அபிவிருத்தித் திட்டம் இரண்டாவது தடவையாக மாவட்டத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தயாரிக்கப்பட்டது. எனினும் மிகக் குறுகிய காலத்தினுள் தயாரிக்கும் நோக்கில் கொத்தணி மட்ட அபிவிருத்தித் திட்டம் (Cluster plan) தயாரிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினதும் அண்மித்த கிராமசேவகர் பிரிவுகளை இணைத்து இக்கொத்தணிகள் உருவாக்கப்பட்டன. இவ்வகையில் ஒவ் வொரு உள்ளூராட்சி மன்றமும் 5 – 7 கொத்தணிகளாக பிரிக்கப்பட்டு கொத்தணி மட்டத் திட்டமிடல் தயாரிக்கப்பட்டது. இவற்றுக்கும் உள்ளூராட்சி மன்ற இணைப்பா ளர்களாக சனசமூக அபிவிருத்தி உத்தியோ கத்தர்களும் கொத்தணி மட்ட இலகுபடுத் துனர்களாக உள்ளூராட்சி மன்ற உத்தியோ கத்தர்களும் இருந்தனர்.

பயிற்சியும் ஆலோசனை வழிகாட்டலும் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்டது. அத்து டன் கொத்தணி மட்டத் திட்டமிடல் குழுவினர் அக்கொத்தணியின் ஒவ்வொரு கிராமங்க ளையும் பிரதிநிதித்துவப்படுத்தி உருவாக் கப்பட்டனர். இவர்களுடன் இணைந்து கொத்தணி மட்டத் திட்டமிடல் தயாரிக்கப் பட்டது. அக்கொத்தணி மட்டத் திட்டமிடல் களை ஒன்றிணைத்து உள்ளூராட்சி மன்ற மட்டத்திலான திட்டமிடலும் தயாரிக்கப் பட்டது. இவை தயாரிக்கப்படும்போது மாவட்ட மட்டத்தில் மாவட்ட செயலகமும் மாகாண மட்டத்தில் மாகாண உள்ளூராட்சித் திணைக்களமும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக் கதாகும். எனினும் இவற்றில் பிரச்சினைக ளை முன்னுரிமைப்படுத்தலில் சிக்கல் நிலை ஏற்பட்டதால் அதில் குறைபாடு இருப்பதாக கருதப்பட்டது. அதாவது கொத்தணி மட்டத் திட்டமிடலின்போது கிராமங்களிடை யேயான முன்னுரிமைப் படுத்தலில் சில முரண்பாடுகள் ஏற்பட்டதால் அவற்றை நியாயப்படுத்த முடியாமல் போனது.

- **2012 இல் கிராமிய மட்டத்திலான அபிவிருத்தித் திட்டம்:**

கொத்தணி மட்டத் திட்டமிடலில் இருந்த குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு மீண்டும் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் 2013 – 2016 ஆம் ஆண்டுக்காக கிராமிய மட்டத்திலான மக்கள் பங்களிப்புடனான 4 வருட அபிவிருத்தித் திட்டமிடலும் அவற்றை ஒன்றிணைத்து உள்ளூராட்சி மன்ற மட்டத்திலான பங்களிப்புடனான 4 வருட அபிவிருத்தித் திட்டமிடலும் தயாரிக்கப்பட் டுள்ளது. இதன்படி மட்டக்களப்பு மாவட்டத் துக்காக 12 உள்ளூராட்சி மன்ற அபிவிருத்

தித் திட்டமிடலும் 345 கிராமிய மட்டத்தி லான பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்ட மிடலும் கைவசம் உள்ளன.

தற்பொழுது எவ்வகை அபிவிருத்தித் திட்டங்களாயினும் குறிப்பிட்ட கிராமங் களுக்கோ, பிரதேசத்துக்கோ முன்மொழியப் படும்போது இத்திட்டமிடலிலிருந்தே முன்மொழியப்படுகின்றது. அத்துடன் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாள ரிடமும் மாகாண உள்ளூராட்சி ஆணையா ளரிடமும் இவற்றின் பிரதிகள் பேணப்படு வதால் குறுகிய காலத்தில் செயற்றிட்டங்கள் முன்மொழியப்படும்போது இந்த உள்ளூ ராட்சி மன்ற பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டமிடலிலிருந்து பெற்று வழங்கக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களில் 3 தடவைகள் தயாரிக்கப்பட்ட மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டமிடலுக்கு உள்ளூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் உத்தியோகத் தர்களிடமிருந்தும் தொடர்புடைய அனைவரி டமிருந்தும் போதிய ஒத்துழைப்பு கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இத்திட்டமிடலானது பல்வேறு தரப்பினராலும் பெரிதும் வரவேற்பைப் பெற்றுள்ளது. குறிப்பாக மக்களுடன் இணைந்து அவர்களையும் இவ்வபிவிருத்தித் திட்டமிடலில் உள்வாங்கி தயாரிக்கப் பட்டதனால் உள்ளூராட்சியின் நல்லாட்சிப் பண்புகளான வெளிப்படைத் தன்மை, வகைப்பொறுப்புக் கூறல், பங்களிப்பு, சமத்துவம், போன்றவை பேணப்படுவதன் அத்தாட்சியாகவும் எடுத்துக்காட்டாகவும் இம்மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டம் திகழ்கின்றது என்பது வெளிப்படை யான உண்மையாகும்.



தியாகராசா தினேஸ்கரன்

தினேஸ்

மோட்டர்ஸ்

பிரதானவீதி,
கொக்கட்டிச்சோலை.

தொ.பே.இல:
0776915885

**கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் கடந்த 15.01.2013 அன்று நடாத்தப்பட்ட திறன் விருத்திக்கான விருது வழங்கல் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் பதின்நான்கு விருதுகளைத் தட்டிக்கொண்டது.**



கௌரவ கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்களும் உயர் அதிகாரிகளும் நிகழ்வுக்கு வரவேற்று அழைத்து வரப்படுகின்றனர்.

2011ம் ஆண்டு தேசத்துக்கு மகுடம் பண்காட்சியில் பங்குபற்றியமைக்காக மட்டக்களப்பு காத்தான்குடி நகர சபை விருது பெற்றமையை பாராட்டுகின்றோம்...






2011ம் ஆண்டு தேசத்துக்கு மகுடம் பண்காட்சியில் பங்குபற்றியமைக்காக மட்டக்களப்பு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை விருது பெற்றமையை பாராட்டுகின்றோம




2012ம் ஆண்டு தேசத்துக்கு மகுடம் பண்காட்சியில் பங்குபற்றியமைக்காக மட்டக்களப்பு கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை விருது பெற்றமையை பாராட்டுகின்றோம்.

2012ம் ஆண்டு தேசத்துக்கு மகுடம் பண்காட்சியில் பங்குபற்றியமைக்காக மட்டக்களப்பு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை விருது பெற்றமையை பாராட்டுகின்றோம்.





2009ம் ஆண்டு மாகாண மட்ட முகாமைத்துவ திறன் போட்டியில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு ஏறாவூர்பற்று பிரதேச சபையை பாராட்டுகின்றோம்.



2010ம் ஆண்டு மாகாண மட்ட முகாமைத்துவ திறன் போட்டியில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு காத்தான்குடி நகர சபையை பாராட்டுகின்றோம்.

2010ம் ஆண்டு மாகாண மட்ட முகாமைத்துவ திறன் போட்டியில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச சபையை பாராட்டுகின்றோம்.





2011ம் ஆண்டு மாகாண மட்ட முகாமைத்துவ திறன் போட்டியில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு காத்தான்குடி நகர சபையை பாராட்டுகின்றோம்.



2011ம் ஆண்டு
மாகாண மட்ட
முகாமைத்துவ
திறன் போட்டியில்
வெற்றி பெற்ற
மட்டக்களப்பு
மண்முனைப் பிரதேச
சபையை
பாராட்டுகின்றோம்.

2011ம் ஆண்டு மாகாண
மட்ட முகாமைத்துவ
திறன் போட்டியில்
வெற்றி பெற்ற
மட்டக்களப்பு
மண்முனை தென்
எருவில்பற்று பிரதேச
சபையை
பாராட்டுகின்றோம்.






2010ம் ஆண்டு மாகாண
மட்ட பொது நூலகப்
போட்டியில் வெற்றி பெற்ற
மட்டக்களப்பு ஏறாவூர்பற்று
பிரதேச சபை செங்கலடி
பொது நூலகம் விருது
பெற்றமையை
பாராட்டுகின்றோம்.



2010ம் ஆண்டு மாகாண மட்ட பொது நூலகப் போட்டியில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு காத்தான்குடி நகர சபை பொது நூலகம் விருது பெற்றமையை பாராட்டுகின்றோம்.



திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் சிறந்த முன்னெடுப்புக்காக விருது பெற்ற மண்முனை மேற்கு பிரதேச சபையை பாராட்டுகின்றோம்.

# உள்ளூராட்சி மன்றங்களில் சமூக கணக்காய்வு குழுக்களின் அறிமுகமும் செயற்பாடுகளும் - மட்டக்களப்பு மாவட்டம்


**க.தமயந்தி**

*சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்*
*உள்ளூராட்சி திணைக்களம், மட்டக்களப்பு.*


மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தமது பிரதேசத்தில் நல்லாட்சியை நிலைநிறுத்தும் பொருட்டும் உள்ளூராட்சி மன்ற திட்டங்கள் சேவைகளில் மக்களின் பங்களிப்பு, ஈடுபாடு, திருப்திநிலை என்பவற்றினை உறுதி செய்து முன்னேற்றகரமான சேவையினை வழங்கும் பொருட்டும் சமூக கணக்காய்வுக் குழு அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றது. கிராம சேவகர் பிரிவுக்கு ஒன்று எனும் அடிப்படையில் கிராமத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சனசமூக நிலையங்களினூடாக இக்குழு அமைக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருகின்றது. அனுபவம், சமூக அக்கறை, துறைசார் அறிவு என்பவற்றினை அடிப்ப டையாகக் கொண்டு பொது நலனுக்காக செயற்படும் விதத்தில் 5– 7 க்கு இடைப்பட்ட அங்கத்தவர்களினை உள்ளடக்கியதாக இக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

சமூக கணக்காய்வு என்பது “ஒரு திட்டம், நிகழ்ச்சித்திட்டம், கொள்கை, சேவை என்பன அது சென்றடைகின்ற இறுதி பயனாளர்களான மக்களினால் உள்ளூர் சூழ் நிலைகளுக்கு பொருத்தமான அமைப் பொன்றில் செயற்பாடுகள் செயற்படுத்த ப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்பதனை உறுதி செய்வதற்கு அதிகார மளிக்கப்படுகின்ற ஒரு செயன்முறையாகும்” இவ் சமூக கணக்காய்வு குழு பாதிக் கப்பட்டோரின் முன்னுரிமைகளையும், தெரிவுகளையும் பிரதிபலிப்பதோடு மூல வளங்களின் வினைத்திறன் மிக்க பயனு றுதியுள்ள நிலைத்திரு விளைதிறனை உறுதிசெய்து வினைத்திறனுடன் பொது நலனுக்காக சேவை செய்யும் ஒரு அமைப்பாகும்.

இக்குழு பங்குதாரர்களின் அனுபவங்க ளினை பிரதிபலித்து குரல்களை பலப்படுத்து வதுடன் தமது பிரதேச எல்லைக்குள் உள்ள நிகழ்ச்சித்திட்டம், நிறுவனத்தின் அனைத்து கூறுகளினையும் பகுப்பாய்வு செய்து மதிப்பீடு செய்கின்றது. மக்களின் நேரடியான ஈடுபாட்டிற்கு சந்தர்ப்பத்தினை வழங்கி அப் பிரதேசத்தில் நடைபெறும் நிகழ்ச்சித் திட்டங்கள், அபிவிருத்திகள், சேவைகளின் விளைவு என்பன வெளிப்படையாக நிறுவனத்திற்கும், மக்களுக்கும் சென்றடை யும் வகையில் அல்லது கட்புலனாகும் வகையில் புள்ளியிடும் தரப்படுத்தும் பணியினையும் மேற்கொண்டு சமூக கணக்காய்வு குழுக்கள் நல்லாட்சிப் பண்புக ளினை நிலை நிறுத்துகின்றது. அத்துடன் நிறுவனத்தின் சேவை, அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பலம் பலவீனங்க ளினை சுட்டிக்காட்டுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது 12 உள்ளூராட்சி மன்றங்களில் 345 கிராம சேவகர் பிரிவுகளுக்குமான 290 சமூக

கணக்காய்வு குழுக்கள் இயங்கி வருவதுடன் இவற்றில் சில தற்போது புறநெகும செயற்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களால் செயற்படுத்தப்படும் தமது கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தில் ஈடுபாட்டையும் பங்க ளிப்பினையும் மேற்கொண்டு தரமான சிறப் பான உள்ளூராட்சி மன்ற சேவை, நிலைத்தி ருக்கதக்க செயற்திட்ட வெளியீடுகள் மக்க ளுக்கு சென்றடைய உள்ளூராட்சி மன்றங் களின் தூண்களில் ஒன்றாக இவ் சமூக கணக்காய்வு குழுக்கள் செயற்பட்டு வருகின்றது.

உள்ளூராட்சி மன்றத்தினால் மேற்கொள்ள ப்படும் அபிவிருத்தி திட்டங்களில் மக்கள் பங்களிப்பு முக்கிய இடம் வகிப்பதோடு அத் திட்டங்கள் நடைபெறும் போது மக்கள் அவ்விடத்தில் நின்று தங்களது கிராமத்தில் நடைபெறும் வேலைகளினை கண்காணி த்தல் வேண்டும் எனும் நோக்கில் புறநெகும திட்டத்தில் இவ் சமூக கணக்காய்வுக் குழுக்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன.

கிராமத்தின் உண்மையான தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காகவும் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் மக்களின் பங்களிப்பினை உறுதி செய்து அவ் ஒதுக்கீட்டினை உண்மைத் தேவைக்காக செலவழித்தல், வீண்விரயங்களை, ஊழலை கட்டுப்படுத்தி மக்களுக்கு அவ்வேலைத் திட்டம் தொடர்பில் விழிப் புணர்வினை வழங்குவதுடன் மக்களுக்கு அவ் வேலை தொடர்பில் உரிமைத்துவத்தினை ஏற்படுத்தி உள்ளூராட்சி மன்ற சேவையின் தரத்தினை உயர்த்துதல். கிராமத்தில் மேற்கொள்ளப் படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் தரத்தினையும், நிலைத்திருக்கும் தன்மையி னையும் உறுதிப்படுத்தல், வினைத்திற னானதும், விளைதிறனானதுமான உள்ளூ ராட்சி மன்ற சேவையை மக்களுக்கு வழங்கல்.

வேலைகள் நடைபெறுகின்ற இடத்தில் இலாப நோக்கில் சில ஒப்பந்த காரர்கள் செயற்படுவதினை தடுத்து குறிப்பிட்ட தரநிர்ணயம், அளவுத்திட்ட மதிப்பீடுகளின் படி வேலைகள் நடைபெறுவதினை கண்காணித்து வேலையின் தரத்தினை உறுதிப்படுத்தி சிறந்த உள்ளூராட்சி சேவையை பெற்றுக் கொள்ளல் போன்ற நோக்கங்களினை நிறைவேற்றும் பொருட்டு சமூக கணக்காய்வுக் குழு இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக் கதாகும்.

அவ் அடிப்படையில் மக்கள் நலனுக்காக மேற்கொள்ளப்படும் வேலைகள் தரமான தாக அமைவதற்கு வேலைத்தளத்தில் நின்று வேலையின் முன்னேற்றம், தரத்தினை கண்காணித்து உறுதிப்படுத்தல், கிராம மட்டத்தில் மக்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை, வேண்டுகோள்களினை தீர்த்து வைத்தல், உரிய நிறுவனங்களுக்கு அதனை தெரியப்படுத்தி அதற்கான தீர்வினை பெற்றுக் கொடுக்க செயற்படுதல், ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்படும் வேலைகளில் திருப்தியின்மை, சந்தேக ங்கள் ஏற்படுமிடத்து தொழில்நுட்ப உத்தியோகத்தர், தவிசாளருக்கு அறியப்ப டுத்தல், வேலைகள் நடைபெறும் பொழுது கூடியளவு நேரம் வேலைத்தளங்களில் நின்று வேலைகளை மேற்பார்வை செய்தல், உள்ளூராட்சி மன்றத்தினால் மேற்கொள் ளப்படும் தங்களது கிராம அபிவிருத்தி வேலைகளை தரமாக குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடிவுறுத்த ஒத்துழைப்பு வழங்கல், வேலைத்தளங்களில் தங்களுக் கென வைக்கப்பட்டுள்ள புத்தகங்களில் நடைபெற்ற வேலைகள், நடைபெறும் வேலைகள், பயன்படுத்தப்பட்ட பொருட்கள், வேலைகள் தொடர்பாகவும், அவதானிக் கப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் குறிப்

பிட்டு அறிக்கையிடல்,சமூக முன்னேற்றத்தினை சமூக அபிவிருத்தியை மனதில் கொண்டு வேலைகள் தொடர்பான முன்னேற்றங்கள் பக்கச்சார்பற்ற உண்மையான விளக்கங்கள் விடயங்கள் போன்றவற்றினை பிரதேச சபைக்கு அறியத்தரல், ஒப்பந்த காரர்கள் பகுதிக் கொடுப்பனவு, இறுதிக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்ள தங்களின் சிபார்சுகளை எழுத்து மூலம் வழங்கல். போன்ற பணிகளை, புறநெகும திட்டத்திற்காக சமூகக் கணக்காய்வு குழுக்கள் அக் கிராமங்களில் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு சமூகக் கணக்காய்வு குழுக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறப்பான முறையில் செயற்பட்டு வருவதுடன் அதனது முன்னேற்றத்தினை உறுதிப்படுத்தி உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை, அபிவிருத்தி வேலைத்திட்டங்களினை மதிப்பீடு செய்யும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் சமூக கணக்காய்வு குழுவினை மையப்படுத்தி தரக்கணிப்பீடு செய்யும் நிகழ்சித்திட்டம் கூடிய விரைவில் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நல்லாட்சிப்பண்புகளான வெளிப்படைதன்மை, பங்குபற்றுதல், சமத்துவம், வகைபொறுப்புக்கூறும் தன்மை என்பன உள்ளூராட்சி மன்றங்களிலும், மக்கள் மத்தியிலும் பேணப்படுகின்றது. .


சின்னத்தம்பி புவனேஸ்வரன்



லினோ

ரேக்ஸ்


பிரதானவீதி,

கொக்கட்டிச்சோலை.

தொ.பே.இல:

0657910582


0772364024




கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையினால் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் பதுறியா சனசமூக நிலையத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மாஞ்சோலை வடிகான் தற்போது மழைகாலங்களில் மிகுந்த பயன் தருவதாக அறிய முடிகின்றது. குறிப்பாக இவ்வருட வெள்ளம் இப்பகுதியில் வழமைக்கு மாறாக விரைவாக வடிந்தோடியுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.



மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையினால் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் பெரிய கல்லாற்றில் நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டிடம் தற்போது பொதுமக்களின் சிறப்பான பயன்பாட்டுக்கு உட்பட்டு வருகின்றது. மக்கள் தற்பேது சந்தையை தூய்மையான இடமாகக் காண்பதாகக் கூறுகின்றனர்.



மண்முனை தென்மேற்கு பிரதேச சபையினால் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட அம்பிளாந்துறை நாவலர் வீதி தற்போது பொதுமக்களுக்கு மிகுந்த பயன் தருவதாக அறிய முடிகின்றது. குறிப்பாக வடிகானுடன் அமைந்துள்ளதால் மழை காலங்களில் இப்பாதை வேளாண்மை செய்கைக்கு மிகவும் பயனுடையதாக உள்ளது.



மண்முனை மேற்கு பிரதேச சபையினால் ஆயித்தியமலையில் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டிடம் தற்போது வியாபாரத்திற்கு உரிய இடமாக மாறி வருகின்றது. இந்தச் சந்தைத் தொகுதியின் கடைகளை வியாபாரிகள் பெறுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

# சேவையில் உள்ளூராட்சி

கருவறை முதல் கல்லறை வரை
மக்களை காத்து நிற்கும் ........

குட்டி அரசை மக்களுக்கு
குறைவின்றி கற்பிக்கும் ........

சேவைகளை ஏழாக்கி மானிடர்களுக்கு
சேட்டை இன்றி வழங்கிடும் .......

அபிவிருத்திகளை அழகாக்கி
அள்ளி வீசும் .......

பொது நிர்வாகத்தை பொக்கிசமாக்கி
பொதுவுடமை தந்திடும் .......

சுகாதார சேவையுடன் சுத்தமான
சூட்சுமங்களை கொண்ட ........

பௌதிக திட்டமிடலை பக்குவமாய்
பவனியில் அறிமுகப்படுத்திய ........

தண்ணீருடன் தாகத்தையும்
தனித்திடம் .......

பொதுப்பயன்பாட்டுடன் பொதுமக்களை
பொழுதுபோக்குடன் வாழவைக்கும் ......

நலன்புரிச் சேனையுடன் நாமினிக்க
நன்மைகள் செய்திடும் .......

மின்சார சேவையினை மேலோங்க
மிளிர வைக்கும் ........

அத்தனை சேவைகளையும் அற்புதமாய்
வழங்கிடும் உள்ளூராட்சி மகுடம் தாங்கி
மலரட்டும் தரணியில்.

சுந்தர்.துசியந்தன்
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
போரதீவு பற்று பிரதேச சபை.

# சமூக வகைப் பொறுப்புக் கூறல்

## Social Responsibility

அன்பழகன் குரூஸ்

சமூகத்தை மேம்படுத்தும் பாதையில் புதிய புதிய எண்ணக்கருக்கள் உருவாகி வருவதனை நாம் அறிவோம். புதிய விடயங்கள் சமூகத்தின் சிந்தனையில் தாக்கம் செலுத்தி சமூகத்தை வளர்ச்சியடையச் செய்கின்றன. இத்தகைய உயர் நிலையை இன்றைய சமூகம் எட்டியுள்ளது என்றால் அதன் வழித்தடங்களில் காணப்படும் சிந்தனை ஆக்கங்களும், புதிய புதிய எண்ணக் கருவூலங்களும் தான் எனலாம்.

ஜனநாயகம் (Demogracy) எனும் எண்ணக் கருவை மனிதன் ஏற்ற போது உலகமே புதிய ஒரு கோணத்தை தொட்டு வளர்ந்தது.

அண்மையில் நல்லாட்சி (Good Governance)எனும் எண்ணக்கரு பரவலாகப் பேசப்படுவதும் ஆட்சி முறையிலும், ஆழப்படுவோர் நிலையிலும் உள்வாங்கப்படுவதனையும் மிக இலகுவாக எங்குமே இனங்காணலாம்.

ஜனநாயகமும், நல்லாட்சியும் ஒரு அரச நிறுவனம் என்ற வகையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மிக அதிகமாக பொருந்து வதாகவும், தேவைப்பாடுடையதாகவும் காணப்படுகின்றது. ஏனெனில் உள்ளூராட்சி மன்றங்களே மக்களால் உருவாக்கப்பட்டு மக்களுக்காகச் செயற்படும் தனித்துவமான அரச நிறுவனமாகும்.

மிக அண்மையில் உள்வாங்கப்பட்ட இன்னும் ஒரு புதிய எண்ணக் கருதான் "சமூக வகைப் பொறுப்புக் கூறல்" என்பதாகும். அண்மையில் அறியப்பட்ட போதும் இதன் அமுலாக்கல் வேகம் அதிகமானதாகும்.

சமூக மாந்தர் மத்தியில் ஒரு உற்சாகத்தை ஏற்படுத்தி, அவர்கள் தம் பொதுத் தேவைகளை உணர்ந்து கொள்ளச் செய்யும் இந்த "சமூகப் பொறுப்பு" என்பது ஒவ்வொரு மனிதன் மத்தியிலும் எழ வேண்டியதும், நிலைத்திருந்து தொழிற்பட வேண்டிய துமாகும்.

சமூக வகைப் பொறுப்புக் கூறல் உள்ளூராட்சிக்கு மிக மிக உரித்துடைய ஒன்றாகும். ஏனெனில் உள்ளூராட்சியின் மூலம் சமூக மாந்தர்களின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமான விடயங்கள் தீர்க்கப்பட வேண்டிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், அதனை வழங்கும் நிறுவனமாக உள்ளூராட்சி மன்றங்கள் இதனோடு நெருக்கமான தொடர்புறுவதனை நாம் காணலாம்.

சமூகப் பொறுப்புக் கூறல் (Social Responsibility) எனும் எண்ணக் கரு சமூக மக்களின் செயற்பாடுகளில் தாக்கம் செலுத்துவதனை நோக்காகக் கொண்டிருக்க சமூக வகைப் பொறுப்புக் கூறல் (Social Accountability) என்பது மக்களுக்கு சேவை வழங்கும் அரச நிறுவனம் ஒன்றின் வகைப் பொறுப்பினை நோக்காகக் கொண்டு, அதில் தாக்கம் செலுத்துவதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆயினும் இரண்டு விடயங்களும் ஒரு இழையின் இரு புரிபோல இரு சாராருக்கும் வலுச் சேர்ப்பதாக அமைவதே இயல்பானதாகின்றது. உண்மையில் இந்த சமூக வகைப் பொறுப்புக் கூறல் நல்லாட்சியின் அதி அவசிய மான பிரதான கூறாகவே நோக்கத்தக்கதாகும்.

சமூகப் பொறுப்புக் கூறல் என்பது பொது மக்கள் மத்தியில் தேவைகள், பிரச்சினைகள், குறைபாடுகள் எழுகின்ற போது அதனை

அம்மக்கள் எந்த நிறுவனம் அப் பணியை நிறைவேற்றப் பணிக்கப் பட்டுள்ளதோ அந்த நிறுவனத்துக்கு அறியத்தந்து அதனைத் தீர்க்க முயற்சிக்கும் ஒரு பொறுப்புடைமையாகும்.

மனிதன் தனது சுய தேவைகளுக்கு அப்பால் பொதுவான தேவைகளோடு தொடர்ந்து வாழ முடியாது. அதனை தீர்த்துக் கொள்ள வேண்டும். ஆகவே அதனை சுட்டிக் காட்டிக் கேட்டும் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பொறுப்பிலிருந்து மனிதன் தவறுவானாயின் அவன் தொடர்ந்து அந்தத் தேவைக்கு அல்லது பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். சமூகம் தனது தேவைகளை நிறைவேற்றுமாறு குறித்த பொறுப்புடைய நிறுவனத்திடம் முறையாகக் கேட்க வேண்டும். அதுபற்றித் தெரியப்படுத்த வேண்டும் அல்லது வேண்டுகோள் விடுக்க வேண்டும். இது முறைப்பாடாகவும், ஆலோசனையாகவும் அமையலாம். அதனை நிறைவேற்ற அல்லது பதில் கூற அந்த நிறுவனம் கடமைப்பட்டுள்ளது. பொதுவில் மக்களின் தேவை அல்லது குறைபாடு ஒன்றை குறித்த நிறுவனம் நிறைவேற்ற அல்லது பதில் கூற முன்வருமாறு யாதாயினும் மக்கள் குழுவினர் முன்னெடுக்கும் நடவடிக்கையே சமூகப் பொறுப்புக் கூறல் எனலாம்.

மறு தலையாகச் சிந்திக்கின்ற போது மக்களின் வரிப் பணத்தில் மக்களுக்காகப் பணியாற்றும் அரச நிறுவனங்கள், தமது விடயம் தொடர்பாக மக்களுக்கு தெளிவு படுத்தி வெளிப்படையாக (Transparency) தொழிற்படக் கடமைப்பட்டுள்ளது. ஒரு பணி தொடர்பாக மக்கள் முழுமையாக அறிந்திருத்தல் வேண்டும். மக்களுக்கு அறியச் செய்வதும் மக்களை இணைத்துக் கொண்டு செயலாற்றுவதும் அரச நிறுவனம் ஒன்றின் சமூக வகைப்பொறுப்பாக அமைகின்றது.

சமூக வகைப் பொறுப்புக் கூறலை நிறைவேற்றும் செயற்பாட்டில் ஈடுபடும் மக்கள் குழுவினர் முதலில் தம்மை அணி திரட்டிக் கொள்ள (Mobilization) வேண்டும். அதற்காக ஒவ்வொருவரும் மக்களை அணி திரட்டும் ஆற்றல் பெற வேண்டும். புதிய புதிய உத்திகளைக் கையாள வேண்டும். அணி திரட்டுக்கான கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். அது மாத்திரமன்றி தமது பிரச்சினைகள் அல்லது தேவைகள் தொடர்பாக தகவல்கள், தரவுகளைத் திரட்டும் ஆற்றல் பெற வேண்டும். அத் தகவல்கள் தரவுகளை பகுப்பாய்வு செய்யும் திறன் அவர்களுக்கு வேண்டும். தாம் அடையாளம் கண்ட முடிவுகளை அல்லது பெறுபேறுகளை அதிகாரிகளுடன் அல்லது அரசியல் வாதிகளுடன் கலந்துரையாடி பேச்சு வார்த்தைகள் செய்து விளங்க வைக்கும் சாமர்த்தியம் பெற வேண்டும்.

சமூக பொறுப்புக் கூறலை வெளிப்ப டுத்துவதற்கு இதுவரை காலமும் வழக் கத்தில் இருந்து வந்த முறையானது.

1. நேரடியாகத் தெரிவிப்பது
2. எழுத்து மூலம் அறிவிப்பது (கடிதம்)
3. தொலைபேசி மூலம் அறிவிப்பது.

இந்தப் பொதுவான முறைமை மிக நீண்ட காலமாக வழக்கில் இருந்து வரும் நிலையில் அதன் பயன்பாடு அருகிச் சென்றதன் விளைவாக இன்று புதிய புதிய சமூகப் பொறுப்புக் கூறல் கருவிகளைப் (Tools of the Social Responsibility) பயன்படுத்தும் நிலை உருவாகியுள்ளது. இவை ஒன்றும் புதிய கருவிகளல்ல. அவ்வாறே மக்களோ அல்லது அரச நிறுவனங்களோ அறியாததுமல்ல. ஆனால் இக் கருவிகளின் அந்தஸ்தை அல்லது அதன் பெறுமானங்களை இருசாராரும் புரிந்து கொள்ளாமை கவலைக்குரியதாகும். இவற்றினை விளக்க வைப்பதும், பயன்படுத்தத் தூண்டுவதும் இதன் பெறுமா னங்களை புரிந்து அரச நிறுவனங்கள் செயற்படச் செய்வதும் அனைவரதும் பொறுப்பாகும். இதற்காக சமூகப் பொறுப்புக் கூறல் கருவிகளை சுருக்கமாக நோக்குதல் அவசியமாகும்.

## 1. ஆலோசனைப் பெட்டி / முறைப்பாட்டுப் பெட்டி
## Suggestion Box / Complaint Box.

பொதுமக்கள் அல்லது சேவை பெறுபவர்கள் தமது கருத்துக்களை, வேண்டுகோள்களை மிக எளிதாகவும், இலகுவாகவும், விரைவாகவும் குறித்த நிறுவனத்துக்குத் தெரிவிக்கப் பயன்படுகின்றது. ஆனால் அதன் பயன்பாடு தற்போது மிக மோசமான நிலையில் உள்ளது. மக்கள் அதனை இன்றும் புரிந்து கொள்ளாத நிலையில் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவதில்லை. அவ்வாறே கருத்துக் களைக் கவனத்தில் எடுக்காத நிலையும் காணப்படுவதனால் இக்கருவியை மக்கள் நம்பவில்லை போல் தெரிகிறது. எனவே இக் கருவியை மக்கள் புரிந்து கொண்டு பயன்படுத்தும் நிலை உருவாக வேண்டும். அவ்வாறே அதனை வைத்திருக்கும் நிறுவனம் அதற்கான உரிய தகவல்களை கொடுத்து, பயன்படுத்தும் முறைமையை பின்பற்றி மக்களுக்கு நம்பகத் தன்மையை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் இது ஒரு முக்கிய சமூகப் பொறுப்புக் கூறல் கருவியாகும்.

## பொதுக் கூட்டங்கள் (Public Hearing)

பொது மக்கள் தமது உளக் கிடக்கைகள், மன உணர்வுகள் மூலம் தமது பிரச்சினைகள், தேவைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும். அடிக்கடி மக்களின் இருப்பிடத்தில் அவர்களை சந்தித்து, அவர்களது கருத்துக்களை அறியும் பொறிமுறை உருவாக்க வேண்டும். தமது கருத்துக்களை கேட்பதில் அந்த நிறுவனம் தயாராகியுள்ளது எனும் உணர்வு மக்களுக்கு ஏற்பட வேண்டும். மக்கள் கூட்டங்களை கூட்டி தமது பிரச்சினைகள், தேவைகளை கூற வேண்டும். இதற்கான சந்தர்ப்பம் இரு பக்கத்திலும் உருவாக்கப்பட வேண்டும். இருபக்கமும் இச்சந்தர்ப்பத்தின் அவசியத்தினை புரிந்து கொள்ள வேண்டும். இங்கு பேசப்படும் விடயங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். அவற்றை செயற்திட்டங்களாக மாற்றுதல் வேண்டும்.

இதன் ஒரு படி மேலாகச் சென்று ஆழமான பிரச்சினைகள், முரண்பாடுகள் தோன்றும் சந்தர்ப்பங்களில் "மக்கள் மன்றங்களை (Public Gallery) உருவாக்க இரு சாராரும் முற்பட வேண்டும். ஏனெனில் இவையே முக்கியமான சமூகப் பொறுப்புக் கூறல் கருவியாகும்.

## மக்கள் பங்குபற்றுதலுடன் திட்டங்களை தயாரித்தல்
## (Participatory Development Plan)

மக்கள் தம் தேவைகளை தாமே அடையாளம் காட்ட வேண்டும். தமது அதிகளவான தேவைகளின் மத்தியில் அவற்றில் எது முக்கியமானது என அவர்களே முன்னுரிமைப்படுத்திக் கூறவேண்டும் அப்பொழுது தான் உண்மையான அடிப்படை பிரச்சினை தீரும். செயற்பாடுகள் நிலைத்திருக்கும்.

தத்தமது தேவைகளை அடையாளம் காட்டி முன்னுரிமைப்படுத்த வேண்டியது சமூகத்தின் பொறுப்பாகும். அதற்கான களத்தினை அமைத்துக் கொடுக்க வேண்டியது சேவை வழங்குனரின் வகைப் பொறுப்பாகவும் அமைகின்றது.

அதாவது திட்டங்களை மக்களே தயாரிக்கும் நிலை மக்களது முக்கிய பொறுப்பாகும். திட்டமிட்டால் தான் செயற்படுத்த முடியும்.

## பொதுத் திட்டங்களின் கண்காணிப்பு
## (Community Monitoring)

சேவை பெறும் மக்கள், தமது சேவைகள் நிறைவேறும் சந்தர்ப்பத்தில் அதன் தரத்தினை உறுதிப்படுத்த அதனைக் கண்காணிக்கும் முக்கிய பொறுப்பினைச் தம்மகத்தே கொண்டுள்ளனர். இதற்காக அந்த அந்த சமூகக் குழுக்கள் முன்வர வேண்டும். அதற்காக சந்தர்ப்பம் உண்டாக்கப்பட வேண்டும். அக் கண்கானிப்புக்கான அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் தவறுகள், குறைபாடுகள் உடனுக்குடன் தீர்க்கப்படுவதுடன் உரிய

செயற்பாட்டின் தரம் பேணப்படும். இதனால் அச் செயற்பாடு மக்களுக்கு நீண்டகாலம் பயனைத்தரும்.

இவ்வாறு கண்காணிப்பது சமூகப் பொறுப்பாகும் இதனை அனுமதிப்பதும், கருத்துக்களை தெரிவிக்க சந்தஊப்பம் வழங்குவதும் உரிய நிறுவனத்தின் வகைப் பொறுப்பாகும்.

### சமூகக் கணக்காய்வுக் குழுக்கள் (Social Audit Committee)

மக்கள் நிதியில், மக்களுக்கான சேவைகள் வழங்கப்படும் பொழுது அரச நிறுவனம் ஒன்று மக்களுக்கு சேவை வழங்கும் நிலையினை கண்காணிப்பதற்காக சமூகத்தின் மத்தியில் சமூகக் கணக்காய்வுக் குழுக்கள் உருவாக்கப்படுதல் சமூகப் பொறுப்புக் கூறலை வெளிப்படுத்தும் மேலும் ஒரு வழிமுறையாகும்.

இதற்காக அறிவும், அர்ப்பணிப்பும் கொண்ட மக்கள் குழு ஒன்றை உருவாக்குதல் வேண்டும்.

அவர்கள் தொடர்ந்து செயற்படுதல் அவர்களது சமூகப் பொறுப்பாகும். அவர்களது கருத்துக்களை குறித்த நிறுவனங்கள் சாதகமாக ஏற்றுக் கொண்டு உண்மைத் தன்மையை ஆராய்ந்து திருத்திக் கொள்ள அல்லது மேலும் முன்னேற முயல வேண்டும்.

### சமூகப் புள்ளியிடல் (Social Scoring)

தமக்கு சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றின் சேவை வழங்கப்படும் தன்மையை மக்கள் குழு ஒன்று மதிப்பீடு செய்து புள்ளி வழங்குவதே இதுவாகும். புள்ளி வழங்கும் போது பக்கச் சார்பின்றி உண்மைத் தன்மை பேணப்படுதலும் அதன் உண்மையை புரிந்து கொண்டு ஏற்கும் நிலையும் உருவாக வேண்டும்

சேவைகளுக்கான புள்ளியிட்டு அதனை நேரடியாக வெளிப்படுத்துவது மக்கள் குழுக்களின் சமூகப் பொறுப்பாகும். அதனை ஏற்று தம்மை மாற்றிக் கொள்வது குறித்த நிறுவனத்தின் வகைப் பொறுப்பாகும்.

இதனை சமூக மட்ட அமைப்புக்களோ அல்லது சமூகக் கணக்காய்வுக் குழுக்களோ மேற் கொள்ளலாம். இப்புள்ளியிடல் காட்சிப்படுத்தத்தக்கதாகும்.

நம்பகத் தன்மையுடன் விஞ்ஞான ரீதியான புள்ளிக் கணிப்பீடு இங்கு அவசியமானதாகின்றது இதற்காக முறையான Formula தயாரித்துக் கொள்ளுதல் நல்லது.

### வரவேற்புக் கரும பீடம் தகவல் கரும பீடம் (Reception/Information Counter)

நிறுவனம் ஒன்று தமது சேவையை இலகுவாக வழங்க இப் பொறிமுறையை உருவாக்குகின்றது. மக்கள் தம் சேவைகளைப் பெறுவதற்கு இது ஒரு சிறந்த வழிமுறையாகும்.

இதனை முறையாக ஏற்படுத்திக் கொடுப்பது நிறுவனத்தின் பொறுப்பாகும் இதனை அணுகி தமது சேவைகள் பெறுதல் மக்களின் சமூகப் பொறுப்பாகும்.

இங்கு பணியாற்றுனரின் மனப்பாங்கு முக்கியமானதாகும். இங்கு வேண்டிய தரவுகள் தகவல்கள் பேணப்பட வேண்டும். மக்கள் நம்பிக்கையுடன் இதனை அணுகும் நிலை உருவாக வேண்டும். நிறுவனத்தின் முழுமையான அடையாளமாக இக் கரும பீடம் அமைவதனால் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

### மக்களுடன் இணைந்து வரவு செலவுத்திட்டங்களைத் தயாரித்தல் (Participatory Budgeting)

உள்ளூராட்சி மன்றங்கள் வரவு செலவுத் திட்டத்தில் தான் இயங்குகின்றது. மக்களுடன் சேர்ந்து வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எனவே மக்களின் தேவைகளைக் கூறி அவை வரவு செலவுத்

திட்டத்தில் இடம் பெறச் செய்வது மக்களின் சமூகப் பொறுப்பாகும். அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது அரச நிறுவனங்களின் குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பாகும். இதனை முழுமையாக அமுலாக்க இருசாராரும் முன்வர வேண்டும்.

### சேவைகளின் தர மதிப்பீடு

மக்கள் தாம் பெற்று அனுபவிக்கும் சேவைகளை குறிப்பிட்ட காலத்துக்குக் காலம் தர மதிப்பீட்டுக்கு உட்படுத்தி உரிய நிறுவனத்துக்கு அறியத்தர வேண்டும். அந்த முடிவுகள் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமையலாம். ஆனால் மதிப்பீடு செய்து வெளிப்படுத்த வேண்டியது சமூகப் பொறுப்பாகும்.

அவ் மதிப்பீட்டுப் பொறுபேற்றினை ஏற்றுக் கொண்டு மேலும் ஆய்வு செய்து செயற்பாடுகளை விரிவாக்கவேண்டியது குறித்த நிறுவனத்தின் சமூக வகைப் பொறுப்பாகும்.

### பிரஜைகள் பிரகடனம் (Citizen Charter)

சேவை வழங்குனரும் பொது மக்களும் இணைந்து தயாரிக்கும் ஒரு உடன்படிக்கையே இதுவாகும். சேவை பெறுவதற்கான நிபந்தனைகளையும், சேவையின் தரத்தினையும் இருபாலாரும் இணைந்து கலந்துரையாடி, பொது உடன் பாட்டுக்கு வரும் நிலையில், இருசாராராலும் ஏற்புடையதாக்கப்பட்டு, அதனை ஒரு உடன்படிக்கையாக கைச்சாத்திட்டு இரு சாராருமாக இணைந்து பிரகடனப்படுத்திக் கொள்ளும் ஒரு ஆதாரம் இதுவே ஆகும்.

இந்த ஆவணம் மக்கள் பிரதி நிதிகளாலும், சேவை வழங்குவோரின் பிரதி நிதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட்டதன் பிற்பாடு அனைவரும் இதற்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

இந்த பொதுமக்கள் பிரகடனத்தின் மூலமாகவும் சமூக பொறுப்புக்கள் நிலை நாட்டப்பட வேண்டும். அதற்காக இரு சாராரும் செயற்பட வேண்டும்.


### ஊடகங்கள் (Mass Media)

மேலே கூறப்பட்ட அனைத்து சமூக வகைப் பொறுப்புக் கருவிகளையும் பயன்படுத்தி பயனற்ற நிலையில் மக்கள் நாட கூடியது பொது சன ஊடகங்களாகும். ஊடகங்களில் கருத்துத் தெரிவிப்பது சமூகத்தின் அடிப்படை உரிமையும், ஜனநாயக கோட்பாடுமாகும்.

ஆகவே ஊடகங்களினுடாக மக்கள் தமது நிலையை வெளிப்படுத்தி நிவர்த்தி செய்வது சமூகப் பொறுப்பாகும்.

ஊடகங்களின் வெளிப்படுத்தலை சாதகமாகப் புரிந்து கொண்டு, அது பற்றி ஆய்வு செய்து அதனைத் தீர்த்தல் அல்லது பதில் கூறல் சேவை வழங்கும் நிறுவனங்களின் வகைப் பொறுப்பாகும்.

எனவே மேற் கூறப்பட்டவாறான சமூகப் பொறுப்புக் கூறல் கருவிகளின் பயன்பாட்டை அதிகரித்து அவற்றினுடாக சமூகப் பொறுப்புக் கூறல் எனும் எண்ணக் கருவை வளர்த்து நல்லாளுகையை உறுதிப் படுத்துவது சகலரினதும் பொறுப்பாகும். குறிப்பாக மக்களுடன் உள்ளூராட்சி மன்றங்களும் இவ் விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவைப்பாடாகும்.







மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையினால் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் கோட்டைக் கல்லாற்றில் நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டிடம் தற்போது பொதுமக்களின் சிறப்பான பயன்பாட்டுக்கு உட்பட்டு வருகின்றது. இந்தச் சந்தையை பெண்களே அதிகம் பயன்படுத்துவது சிறப்பானதாகும்.



மண்முனை தென் மேற்கு பிரதேச சபையினால் புறநெகும் செயற்திட்டத்தின் மூலம் கொக்கட்டிச்சோலையில் ஆதவன் சனசமூக நிலையத்தினால் நேரடி ஒப்பந்தம் மூலம் நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டிடம் தற்போது பொதுமக்களின் சிறப்பான பயன்பாட்டுக்கு உட்பட்டு வருகின்றது. இந்தச் சந்தையில் வெளியூர் வியாபாரிகள் வருவதனால் படுவான்கரை மக்கள் அனைத்துப் பொருட்களையும் கொள்வனவு செய்ய முடிவதுடன், தமது சிறு உற்பத்திப் பொருட்களையும் விற்பனை செய்யமுடிவதாக கூறுகின்றனர்.



ஏறாவூர்ப் பற்று பிரதேச சபையினால் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் கொம்மாதுறையில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா தற்போது சிறார்களின் பயன்பாட்டுக்கு தயாராகி வருகின்றது.



மண்முனை மேற்கு பிரதேச சபையினால் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட நெல்லுச்சேனை முள்ளாமுனை வீதி தற்போது விவசாயிகளுக்கு மிகுந்த பயன் தருவதாக அறிய முடிகின்றது. குறிப்பாக இப்பாதை வேளாண்மை செய்கைக்கு மிகவும் பயனுடையதாக உள்ளது. அறுவடை காலங்களில் மிகுந்த பயன் பெற்றதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

# உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் அதன் முக்கியத்துவமும்.

உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்திப் பணியும் அதன் முக்கியத்துவமும் என்கின்ற போது உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்கு பொறுப்புக் கூறும் நிலையிலுள்ள ஒரு நிறுவனமாகும் என்பதற்கு மேலாக நேரடியாக மக்களுடன் இணைந்து அவர்களின் தேவைகளை கருவறை தொடங்கி இறுதியாக மயானங்களை பராமரிப்பது வரையிலான பாரிய பணியினை வழங்கும் நிறுவனங்களாக உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றது. இந்த வகையில் உள்ளூராட்சி மன்றங்கள் மக்களின் தேவைகளை அவர்களிடமிருந்து பெற்று அவற்றினை முன்னுரிமை அடிப்படையில் அவர்களின் பங்களிப்புடனும் மேற்பார்வையுடனும் திட்டங்களை அமுல்படுத்தி அவர்களினால் பராமரிக்கப்படும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

உள்ளூராட்சி மன்றங்கள் அபிவிருத்திப் பணியில் ஈடுபடுகின்ற போது அவ் அபிவிருத்திப்பணிக்காக நிதியினை பெற்றுக் கொள்ளுதல் என்பது பாரிய சவாலாகவுள்ளது. மக்களின் பலதரப்பட்ட தேவைகளுடன் ஒப்பிடுகின்ற போது அவற்றினை பூர்த்தி செய்வதற்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு கிடைக்கின்ற நிதியின் அளவானது மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது இந்நிலையில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் வேலைத்திட்டங்களை இனம் கண்டு அவற்றினை அமுல்படுத்துகின்ற போது அவ்வேலைத் திட்டங்கள் சரியான வையாகவும் மக்களின் தேவைகளை ஈடுசெய்யும் வகையில் வினைதிறனுடனும் விளைதிறனுடனும் குறித்த நோக்கத்தினை அடையக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அப்போது தான் மக்களுக்கு பொறுப்பு கூறக்கூடிய நிலையினை ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் பெற்றுக்கொள்ளும். இந்த வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்திப் பணிகள் எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாகவுள்ளது என்பதனைக் கானலாம்.

எனவே உள்ளூராட்சி மன்றங்கள் மக்களின் அபிவிருத்திப் பணிக்காக தமது நிதியுடன் மட்டுமன்றி அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் விடுவிக்கப்படுகின்ற நிதியிலே உள்ளூராட்சி மன்றங்கள் பெரும்பாலும் தங்கி இருக்க வேண்டியுள்ளது.

இந்தவகையில் உள்ளூராட்சி மன்றத்திற்கு கிடைக்கின்ற நிதிமூலங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

* சபை நிதி (Council Fund)

* குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG)

* பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை (CBG)

*ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் காலத்திற்கு காலம் விசேட ஏற்பாடுகள் மூலமாக விடுவிக்கப் படுகின்ற நிதி என்பவற்றினை குறிப்பிடலாம்.

*புறநெகும வேலைத்திட்டம் (Purane guma)

* ஜெய்கா (Jica)

இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்திக் காக 2006ம் ஆண்டிற்குப் பின்னர் செயற்திட்டங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சபை வருமானங்கள் மூலமாக கிடைக்கப் பெற்ற நிதியானது முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துச் செல்வதனை தரவுகளின் வாயிலான அறிய முடிகின்றது.


இந்த வகையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கிடைக்கின்ற நிதியினை அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு பயன்படுத்துகின்றபோது

- வேலைத்திட்டங்களை எவ்வாறு இனம் காண்பது.
- இனம் காணப்பட்ட வேலைகளை எவ்வாறு அமுல்படுத்துவது
- வேலைத்திட்டங்களை அமுல்படுத்திய பின்னர் அதனை மீள்மதிப்பீடு செய்தலும் பராமரித்தலும்.

போன்ற விடயங்களை கவனத்தில் கொண்டு வேலைத்திட்டங்களை அமுல்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்கள் மட்டுமன்றி நிதியினை விடுவிக்கும் நிதி நிறுவனங்கள் மற்றும் குறித்த வேலைத்திட்டத்திற்கான பங்காளர்களையும் பயனாளிகளையும் கவனத்தில் கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும். மேலும் திட்டங்களை அமுல்படுத்துகின்ற போது பொருளாதாரம், சுற்றுச் சூழல் மற்றும் சமூகம் போன்றவற்றினையும் உள்வாங்கி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப் படுகின்ற போதுதான் அத்திட்டமானது பயனுறுதிமிக்கதாகவும் நிலைத்திருக்கும் தன்மை கொண்டதாகவும் அமையும்.

**வேலைத்திட்டங்ளை இனம் காணுதல்**

இந்த வகையில் வேலைத்திட்டங்களை இனம் காணுதல் தொடர்பில் 2008ம் ஆண்டின் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களினால் வேலைத்திட்டங்களை இனம்காணுகின்ற போது மக்கள் பங்கேற்புடன் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களினாலும்




தயாரிக்கப்பட்ட LAPDP யில் இருந்து மக்களினால் முன்னுரிமைப் படுத்தப்பட்டமைக்கு அமைவாக வேலைத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்

இந்தவகையில் உள்ளூராட்சி மன்றங்களினால் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை எடுத்து நோக்கின் அவை பெரிதும் பயனுறுதிமிக்கதாகவுள்ளது எனலாம்.

இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளூராட்சி மன்றங்களினால் முன்வைக்கப்படும் புறநெகும வேலைத்திட்டத்தினை எடுத்து நோக்கின் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் திட்டங்களை தெரிவு செய்கின்ற போது உள்ளூராட்சி மன்றங்களினால் தயாரிக்கப்பட்ட LAPDP யில் உள்வாங்கப்பட்டு முன்னுரிமைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ்வேலைத்திட்டம் குறித்து தயாரிக்கப்பட்ட திட்டமுன்மொழிவுகளை தொழில்நுட்ப, சமூக, சூழல் மற்றும் மேற்பார்வை, மதிப்பீட்டிற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய திட்ட மதிப்பீட்டுக் குழுவின் (PAT) சிபார்சினைப் பெற்றே இவ்வேலைத்திட்டத்திற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

எனவே இத்தகைய செயற்பாட்டிற்கமைய வேலைத்திட்டங்கள் இனம்காணப்படுகின்ற போது அவை கூடுதலாக மக்களின் பயன்பாட்டிற்குள்ளாவதும் நிலைத்து நிற்கக்கூடிய தன்மையினை பெற்றதாகவும் அமைகின்றது ஆனால் இதற்கு மாறாக வேலைத்திட்டங்கள் மக்களினால் இனம் காணப்படாத நிலையில் அமுல்படுத்தப்படுகின்ற போது அவை மக்களின் பயன்பாடு அற்றநிலையில் உள்ளதனையும் அவதானிக்கலாம்.

வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல




கடந்த ஐந்து வருடமாக மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களினால் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை எடுத்து நோக்கின் அவற்றுள் பெரும்பாலானவை 75% வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் 09% மானவை கட்டிடங்கள் அமைத்தல் மற்றும் புனரமைப்புச் செய்தல் தொடர்பாகவும் 05% மான வேலைத்திட்

டங்கள் குடிநீர் மற்றும் மலசலகூடங்களை அமைத்தலுக்கும் மிகுதியாகவுள்ள 11% ஏனைய வேலைத்திட்டங்களையும் செயற் படுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்

மேலும் இத்தகைய வேலைத்திட்டங்களை எடுத்து நோக்கின் கடந்தகால வேலைக ளுடன் ஒப்பிடுகின்ற போது இவற்றின் நிலைத்திரு தன்மை அதிகரித்து வந்துள்ள மையினை கண்டுகொள்ளக் கூடியதாக வுள்ளதோடு இதற்கு பிரதான காரணிகளாக பின்வருவனவற்றினை குறிப்பிடலாம்.

- வேலைத்திட்டங்களை அமுல்படுத்துகின்ற போது உள்ளூராட்சி மன்றங்களினால் கடைப்பிடிக்கப்படுகின்ற முறையான பெறுகை நடைமுறைகள்

- அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்வதற்காக அமைக்கப்பட்ட சமூக கணக்காய்வு குழுக்கள்.

- வேலைத்திட்டங்களில் மக்கள் பங்க ளிப்பினையும் உள்வாங்குதல்.

- கிராம மட்டத்திலான அமைப்புக்களை பலப்படுத்தியமை.

- அமுல்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் வெளிப்படைத்தன்மையினை பேணுதல்.

- உள்ளூராட்சி மன்றம் அதன் பணிகள் தொடர்பில் தெளிவடைந்த மக்கள்.

- பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள்.

**பராமரித்தல்**

உள்ளூராட்சி மன்றத்தினால் அமுல்படுத்தப் பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் இதுபற்றிய தரவுகள் ஒவ்வொரு உள்ளூ ராட்சி மன்றங்களிலும் சொத்துப் பதிவேடு களில் பதியப்பட்டு தங்களின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கமைவாக இவ் வேலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்ற போதிலும் சில உள்ளூராட்சி மன்றங்களில் இவ்வேலைத் திட்டம் தொடர்பில் தொடர் நடவடிக்கை அதாவது பராமரித்தல் தொடர்பிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுதல் குறைவாகவே காணப்படுகின்றது இதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் வருமான மூலங்கள் குறைவாகவுள்ளமையும் புனர மைப்பு வேலைகளை விட புதிய நிர்மான வேலைகள் செய்வதனை சிலர் விரும்புவ தனையும் காரணமாக கூறிக்கொள்ளலாம்.

எனவே உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத் தும் வகையில் புறநெகும வேலைத்திட்டம் அமைந்துள்ளது என்பதோடு அபிவிருத்தித் திட்டங்களை பொறுத்தவரையில் தனி ஒருவரது தெரிவுக்கு அப்பால் மக்களினால் தெரிவு செய்யப்பட்டு மக்களின் பங்களிப்புடனும் அவர்களின் மேற்பார்வை யுடனும் அமுல்படுத்தப் படுகின்ற வேலைத் திட்டங்கள் பயனுறுதி மிக்கதாக அமையும். என்பதுடன் உள்ளூராட்சி மன்றங்களினால் அமுல்படுத்தப்படுகின்ற வேலைத்திட் டங்களை மதிப்பீடு செய்வதற்காக புறநெகும வேலைத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டுக் குழு போன்று உள்ளூராட்சி மன்றங்களினால் அமுல்படுத் தப்படுகின்ற அனைத்து வேலைகளையும் மதிப்பீடு செய்வதற்கும் வேலைகளின் தரத்தினை உறுதி செய்வதற்குமான ஒரு குழு மாவட்ட ரீதியில் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களங்களில் உருவாககப்பட்டு உள்ளூராட்சி மன்றங்களின் வேலைத்திட்டங் களை மேற்பார்வை செய்கின்ற போது உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஒரு தனித்துவம் மிக்கதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**திரு. சி. வசந்தராஜா**
**உள்ளூராட்சி உதவியாளர்**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி**
**ஆணையாளர் அலுவலகம் – மட்டக்களப்பு.**



மண்முனைப்பற்று பிரதேச சபையினால் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட ஆரையம்பதி ஜோதி ஒழுங்கை வடிகான் தற்போது மழைகாலங்களில் மிகுந்த பயன் தருவதாக அறிய முடிகின்றது. குறிப்பாக இவ்வருட வெள்ளம் இப்பகுதியில் வழமைக்கு மாறாக விரைவாக வடிந்தோடியுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.



காத்தான்குடி நகர சபையினால் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட அல் அமீன் வீதி வடிகான் தற்போது முடிவுறும் நிலையில் உள்ளது.

# உள்ளூராட்சி நிறுவனங்களில் பெறுகை நடைமுறை

## (Procurement Procedure in Local Authorities)

பெறுகை (Procurement என்ற சொல்லானது அண்மையிலேதான் அரச துறையில் பாவிக்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் கேள்வி நடைமுறை (Tender) என பாவிக்கப்பட்டது. கட்டுமான வேலை (Works), சேவை (Service), வழங்கல் (Supply), ஆகியவற்றை பெற்றுக் கொள்வதற்கு பழைய கேள்வி முறைக்கு பதிலாக விரிவான பொருளில் பெறுகை எனும் சொல் தற்போது காணப் படுகின்றது.

1996/1997 அரச பெறுகை நடைமுறை தொடர்பான வழி காட்டல் கோவை, அரச நிதி ஒழுங்கு விதிகளின் பெறுகை நடைமுறை தொடர்பாக குறித்துரைத்த விதிகளுக்கு பதிலாக தேசிய பெறுகை முகவராண்மை நிறுவனத்தால் வெளியிடப்பட்ட 2006 புதிய பெறுகை நடைமுறை (Procurement guidelines - 2006) தற்போது அமுலில் உள்ளது.

இதனை பயன்படுத்தும் நிறுவனங்களாக, அரசாங்க அமைச்சு, மாகாண சபை, அரசாங்க திணைக்களங்கள், நியதிச்சட்ட முறையான அதிகார சபைகள், அரசாங்க கூட்டுத் தாபனங்கள், அரச கம்பனி, உள்ளூராட்சி நிறுவனங்கள், அல்லது ஏதேனும் ஓர் துறை சார்ந்த நிறுவனங்கள் காணப்படுகின்றன.

இதே வேளையில் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது ஒரு வெளிநாட்டு நிதியளிப்பு முகவர் நிலையத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட ஏதேனும் பெறுகை நடைமுறை தொடர்பில் அவ்வவ் நிதி நிறுவனங்களின் பெறுகை முறையினையும் பின்பற்றுவதுடன் ஏதாவது முரண்பாடு ஏற்பட்டால் 2006 புதிய பெறுகை நடைமுறை மேலோங்கி காணப்படும். அதேவேளையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசாங்க பெறுகை வழிகாட்டியினை கடைபிடிக்கும் போது தமது அடிப்படை சட்டங்கள் (MC ordinance, UC ordinance, PS act.) ஒழுங்கு விதிகளை மீறாத வகையில் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டு கோவை பொருள்கோடலில் குறிப்பிட்டதன்படி அரசாங்க பெறுகை வழிகாட்டி நெறியை பயன்படுத்துவதில் தடையில்லை.

### உள்ளூராட்சி நிறுவனங்களின் பெறுகை நடைமுறைக்கு ஏற்புடையதான சட்ட ஒழுங்கு விதிகள்

1. அடிப்படை சட்டங்கள் :-

- மாநகர சபை கட்டளைச்சட்டம் - 227, 228, 229
- நகரசபைக் கட்டளைச்சட்டம் - 38, 39, 40
- பிரதேச சபைச்சட்டம் - 173, 174

2. உப விதிகள் :-

- பிரதேச சபை ஒழுங்கு விதிகள் 554/5 - 1989-4.17 பகுதி - VII
- மாநகர சபைகளின் துணைசட்டங்கள் 548l17 - 1989-1-20பகுதி - V

3. அரசாங்கத்துறையின் சட்ட ஒழுங்கு விதிகள் :-

- அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டு கோவை (Procurement guidelines - 2006)
- இலங்கை அரசின் நிதி ஒழுங்கு விதிகள் - 685 - 8207
- திறைசேரி சுற்றுநிருபங்கள் மற்றும் ஆலோசனைகள்

4. மாகாண சபை சட்ட ஒழுங்கு விதிகள்

- மாகாண சபை நிதிக் கட்டளைகள் - 1987/42 சட்டத்தில் பிரிவு 19(5) பிரகாரம் வெளியிடப்பட்ட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்களின் சுற்றுநிருபங்கள் மற்றும் ஆலோசனைகள்.

5. பெறுகை நடைமுறையுடன் தொடர்புடைய ஏனைய சட்டங்கள்

- 1982ம் ஆண்டு 43ம் இலக்க முத்திரை
- சட்டம் 1987ம் ஆண்டு 12ம் இலக்க
- பொதுச் சொத்துக்களின் பிணைச்சட்டம் 1996ம் ஆண்டு 11ம் இலக்க நடுத்தீர்ப்பு வழங் கும் சட்டம்
- 2002ம் ஆண்டு 14ம் இலக்க வட்வரிச் சட்டம்

அரசபெறுகை முறைகள் 12 காணப்பட்ட போதும், உள்ளூராட்சி சட்ட ஒழுங்குவிதிகளின்படி 05 பெறுகை முறைகள் காணப்படுகின்றன. அவை யாவன

1. போட்டி தன்மையுடன் கூடிய திறந்த கேள் விடுமுறை

- மாநகர சபை கட்டளைச்சட்டம் - 229
- நகரசபைக் கட்டளைச்சட்டம் - 40
- பிரதேச சபைச்சட்டம் - 177

2. திறந்த கேள்வி முறையின்றி வேலைகளை கையளித்தல்

- மாநகர சபை கட்டளைச்சட்டம் - (229) - ரூ. 15,000 குறைந்த தொகை
- நகரசபைக் கட்டளைச்சட்டம் - (40) - ரூ.10,000 குறைந்த தொகை
- பிரதேச சபைச்சட்டம் - (177) - ரூ.5,000 குறைந்த தொகை

3. வரையறுக்கப்பட்ட விலைக்கேள்விகள் மற்றும் கேள்வி கோருதல்.

- பிரதேச சபை ஒழுங்கு விதிகள் - 178
- மாநகர சபைகளின் துணைச்சட்டங்கள் 548l17-1989-1-20 பகுதி -V-3

4. அரசாங்க திணைக்களங்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களைக் கொண்டு கட்டுமான வேலைகளைச் செய்வித்தல்.

- பிரதேச சபை ஒழுங்கு விதிகள் - 174,

5. தமது ஊழியர்கள், உபகரணங்கள், மற்றும் பொருட்கள் ஆகியவற்றை பயன்படுத்தி திணைக்களத்து முறைக்கு அமைவாக வேலையினை செய்வித்தல்

- ஒழுங்கு விதிகள் மற்றும் துணைச் சட்டங்கள்
- உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்று நிருபங்கள்
- மாகாண சபை சுற்று நிருபங்கள்

உள்ளூராட்சி நிறுவனங்களின் சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பாக கடந்த 25 வருட காலமாக நடைமுறைக்கு ஏற்புடையதான வகையில் திருத்தம் ஏதும் மேற்கொள்ளப்படாமையினால் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டு கோவையில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் ஏற்புடையதாக வேண்டுமென காட்டப்பட்டுள்ளதன் அடிப்படையில் எதிர்காலத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களின் சட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் பிரமாணங்களின் வழிகாட்டல்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

உள்ளூராட்சி நிறுவனங்களில் உற்பத்திதிறன் (Productivity), ஏற்றுமதித்தல் (Responsiveness), வகைப்பொறுப்புகூறல் (Accountabiliity), வெளிப்படைத்தன்மை (Transparency) போன்ற நல்லாட்சி (Good Governance), பண்புகளைப் பேணுவதற்காக பெறுகை நடை முறையின்போது பின்வரும் நடவடிக் கைகளை மேற்கொள்வது சிறந்ததாகும்.

1. அரச நிதியினைக் கொண்டு கட்டுமான வேலை (works, Goods) சேவை (Service), வழங்கல் (Supply) மேற்கொள்ளும் போது நிதி ஒதுக்கீடு வழங்கும் நிறுவனங்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்.

2. மகாணசபை நிதி மாகாணசபை நிதி அதி காரிகளின் ஆலோசனைகளைப் பெற் றுக்கொள்ளல்.

3. உள்ளூராட்சி மன்ற நிதியில் கட்டுமா னவேலை (works, Goods) சேவை (Service), வழங்கல் (Supply) விற்ப னை (Sale), வாடகை (Rent) மேற் கொள்ளும் போது சபையின் சட்டம், துணைச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுவதை உறுதிப்படுத்தல்.

4. வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் நிதி யினைக் கொண்டு பெறுகை நடைமுறை யினை மேற்கொள்ளும் போது அவ்வவ் நிறுவனங்களிற்கு உரித்தான பெறுகை நடைமுறையினைப் பின்பற்றும் அதே வேளையில் இலங்கையிலுள்ள பெறுகை சட்டத்திற்கு முரணான வகையில் செயற் படாமல் இருப்பதனை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும்.

பொதுவாக பெறுகை நடைமுறை அல்லது பெறுகை முகாமைத்துவம் என்பது Procurement Planning Preparation of bid documents, Invitation to bid, Closing to bid evaluation, Award of contract, Complete of contract வரையான விடயங்களை சட்டவரண் முறையான வகையில் முகாமை செய்வதாக உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 12 உள்ளூராட்சி மன்றங்களிலும் நீண்ட காலமாக இந்நடைமுறை காணப்படினும் 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகளை மேம்படுத்தும் திட்டம் (புறநெகும) ஊடாக இந்நடைமுறையில் வலுவூட்டமடைந்துள் ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

க.ரவிச்சந்திரன்
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மட்டக்களப்பு.



**பண்டாரியாவெளி கொங்கிறீட் வீதி தொடர்பான மக்களின் கருத்து.**

ந.சுப்பிரமணியம் வயது 70 ஆகிய நான் தெரிவித்துக் கொள் வதாவது குறிப்பிட்ட பண்டாரியா வெளி வீதி கொங்கிறீட் வீதியாக மற்ற மடைவதற்கு முன்னர் சேறும் சகதியுமாக காட்சியளித்தது. மேலும் இவ்வீதியை பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள், விவசாயிகள், மற்றும் குறித்த வீதியில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் இவ் வீதியை பயன்படுத்தி வந்தனர். தற்போது இவ் வீதி புறநெகும திட்டத்தினுடாக பிரதேச சபையால் கொங்கிறீட் வீதியாக மாற்றி அமைக்கப்பட்டு பொதுமக்களின் பாவனைக்காக விடப்பட்டுள்ள நிலையில் இவ் வீதியை பயன்படுத்தும் மக்கள் தங்கள் போக்குவரத்தின் போது ஏற்பட்ட கஷ்டங்கள் இப்போது பிரதேச சபையால் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கி ன்றனர்.

# உள்ளூராட்சி மன்றங்களின் துணை விதிகள்

வே.முருகமூர்த்தி

எமது நாட்டின் உள்ளூராட்சியின் நீண்டகால வரலாற்றுக்கு உரிமை பாராட்டும் உள்ளூ ராட்சி முறைமை வரலாற்றாசிரி யர்களால் மாத்திர மின்றி உள்ளூராட்சி விடயம் தொடர்பில் கற்கைகளை மேற்கொண்ட அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடய மாக அமைகிறது.

இலங்கையின் அரச ஆட்சி முறைகளுக்குள் ளே பிரதேச உள்ளூர் - ஆட்சி தொடர்பான சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தைக் கொண்டதாக உள்ளூராட்சி மன்றங்கள் விளங்குகின்றன. முதன்மைச் சட்டம் மூலமாக அதிகாரக் கையளித்தல் இடம் பெறுகின்றது. சட்டம் இன்றி ஆட்சி செய்ய முடியாது உள்ளூராட்சி மன்றம் ஒன்றுக்கு கையளிக்க ப்பட்டுள்ள அதிகாரங்களை அமுலாக்கவும், கடமைகளை ஈடேற்றவும் துணைவிதிகளை ஆக்கிக் கொள்வதற்கான அதிகாரம் கையளிக்கப்பட்டு ள்ளது. துணை விதிகள் இல்லாவிட்டால் உள்ளூராட்சி மன்றங்கள் தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை ஈடேற்றிக் கொள்ள இயலாது.

உள்ளூராட்சி மன்றங்களில் அமுலாக்கப் படுகின்ற கடமைகளுல் அதிகாரங்களும் அவ்வப் பிதேசத்தின் இடஅவை, புவியியல், கலாசார சமூக நிலைமைகளின் அடிப்ப டையில் மாறுபாடு உடையவை. எனவே உள்ளூராட்சி மன்றக் கடமைகள், அதிகாரங் கள் அமுலாக்கல் பற்றி ஒரே வரைய றைக்குள் அடக்க முடியாது. இதனாலேயே உள்ளூராட்சி மன்ற அதிகாரம் பிரதேசத்தின் புவியியல், இடஅமைவு மற்றும் கலாசார சமூக நிலை மைகளுக்கேற்ப தனிவேறான சட்டங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டிய தேவை தோன்றக்கூடும். இதன் பொருட்டு சகலவித மான உள்ளூராட்சி மன்றங்களுக்கும் துணை விதிகளை ஆக்கிக் கொள்வதற்கான அதிகா ரம், தத்துவமளித்தல், தாபித்தல் சட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் தாபிக்கப்பட்டதன் சட்டங்கள் மூலமாக துணைவிதிகளை ஆக்கிக் கொள்வதற்கான அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கிடைத்துள்ளது.

மாநகரசபை கட்டளைச் சட்டத்தின்
- 267ம் பிரிவு

நகரசபை கட்டளைச் சட்டத்தின்
- 150ம் பிரிவு

பிரதேசசபை பிரதேச சபைகள் சட்டத்தின்
- 122ம் பிரிவு

உள்ளூராட்சி நிறுவனங்கள் தாபித்தல் சட்டங்களின் எத்தகைய விடயங்கள் மற்றும் காரணங்களுக்காக துணைவிதிகளை ஆக்கலாம் என தாபித்தல் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநகரசபை கட்டளைச் சட்டம்
- 147, 272ம் பிரிவுகள்

நகரசபை கட்டளைச் சட்டம்
- 93, 157ம் பிரிவுகள்

பிரதேசசபைச் சட்டம்
- 69, 126ம் பிரிவுகள்

தற்போது நடைமுறையில் உள்ள துணை விதிகளை மூன்று வகைகளின் கீழ் உள்ளடக்க முடியும்.

1) அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்படுகி ன்ற அவசியம், பின்பற்ற வேண்டிய துணைவிதிகள் (Standared By Laws)

2) அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்படுகி ன்ற சபைகள் தமது விருப்பத்துக்கு அமைய ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ள மாதிரித்துணை விதிகள்.

3) துணைவிதிகள் ஆக்கத்துக்கு அதிகார மளிகின்ற ஏற்பாடுகளின் கீழ் சபைகளி னால் நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய தான துணைவிதிகள்.

துணைவிதிகள்

i) அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்படும் துணைவிதி

அமைச்சரினால் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும் பாராளுமன்றத்தினால் அங்கீ கரிக்கப்படும் அதே கருமம். நோக்கத்துக்காக உள்ளூராட்சி மன்றத்தால் ஆக்கப்பட்டதாக கருதப்படும். துணைவிதியை மேலோங்கி நிற்றல் வேண்டும். எடுத்துக்காட்டாக பிரதேசசபைகள் சபைக்கூட்டங் களை நடத்துதல் (அதிவிசேட வர்த்தமானி 488/16, 1988. 01. 13ந் திகதி ) வரவு செலவுத் திட்டத் தைத் தயார் செய்தல். துணைவிதிகள் (1989.04.17ந் திகதி 554/5ம் இல அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.)

ii) அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்படும் வரைபுத் துணைவிதிகள்

உள்ளூராட்சி அமைச்சரினால் வெளிப்படுத்த வல்லது. வரைபுத் தரப்படுத்தல் துணை விதிகள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன

| | |
|---|---|
| மாநகரசபை | 1989.1.23ந் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 541/17 - 42பகுதிகள் |
| நகரசபை | 1973.9.12ந் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல181 - 33பகுதிகள் |
| பிரதேசசபை | 1988.8.23ந்திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 520/7 - 42பகுதிகள் |

பெரும்பாலான சபைகள் இவ்துணை விதி களையும் பிரேரனை ஒன்றை நிறைவேற்று வதன் மூலம் தமது பணிகளை இலகுபடுத்திக் கொண்டுள்ளன. மாகாணசபைகளும் இத்து ணை விதியை ஏற்றுக்கொள்வதற்குசட்ட ரீதி யான நடவடிக்கை எடுத்துள்ளன.

iii) சபையில் நிறைவேற்றப்பட்ட துணை விதிகள்

சபைக்கு அத்தியாவசியமாகும்போது தமது தேவைக்கேற்றவாறு துணைவிதிகளை ஆக்கிக் கொள்ள இந்த ஏற்பாடுகளின் கீழ் வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன. சபையின் அதிகாரத்தை செயற்படுத்துவ தற்கான மேலதிக சட்ட அதிகா ரங்களை புதிய துணைவிதிகள் மூலம் நிறை வேற்றிக் கொள்ள முடியும்.

துணைவிதிகளை ஆக்கிக்கொள்ளும் போது பின்வரும் விடயங்கள் பின்பற்றப்படுவது அவசியமாகும்.

i) சபையின் உண்மைத்தேவையினை தீர்மானித்துக் கொள்ளல்.

ii) வேறு மன்ற மொன்றுக்கு நிறைவேற்றிக் கொண்டுள்ள துணைவிதியொன்று இருப் பின் அதன் மாதிரியைக் கவனத்தில் கொள்ளல்.

iii) பொருள் கோடல் சட்டத்தின் தேவைப் பாடுகளை பூர்த்தி செய்தல்.

iv) வரைபு தொடர்பில் யோசனைகளை நிறை வேற்றுவதன் மூலம் இணக்கப் பாட்டுக்கு வருதல்

v) பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் மாகாண சபையின் உள்ளூ ராட்சி ஆணையாளர் ஊடாக உள்ளூ ராட்சி அமைச்சின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ளல்.

vi) அமைச்சு சுட்டிக் காட்டுகின்ற தேவைப் பாடுகளை கவனத்தில் கொண்டு ஆக்கப் பட்ட துணை விதியை சபையில் பிரேர ணையொன்றின் மூலம் ஏற்றுக்கொண் டு மும்மொழிகளிலும் வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தப்படல்

vii) மாகாணசபையின் உள்ளூராட்சி அமைச்சுக்கு வர்த்தமானியின் போதியளவு பிரதிகளைச் சமர்ப்பித்தலும் குறித்த துணை விதியை மாகாண சபையில் நிறைவேற்றலும்.

## பொருள்கோடல் கட்டளைச் சட்டம்

துணைவிதிகளை ஆக்குதல் சம்மந்தமாக பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் கவனத்தில் கொள்ளல் அவசியமானதொன்றாகும்.

விதிகளை ஆக்கும் அதிகாரியினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்விதிகளை ஆக்கிய அதே வழிமுறையைப் பின்பற்றி திருத்தியமைக்க மாற்றம் இல்லாதொழிக்க அழிக்க அதிகாரம் உள்ளது.

விதிகள் மீறப்படும்போது தீர்மானிக்கப்படுகின்ற வாறான அபராதத் தொகையினையும் நீதிவான் நீதிமன்றத்தினால் அமுலாக்கப்பட வேண்டிய அபராதத் தொகையினை அறவிடப் படல்.

பிரதான சட்டத்துடன் ஏற்புடையதாயிருத்தல் எந்தவொரு சட்டத்துடனும் கட்டளையுடனும் முரண்பாடு ஏற்படக்கூடாது.

அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் செயலிழக்கச் செய்தல் நிராகரிப்பதற்கான ஏற்பாடுகள்

வர்த்தகமானி அறிவித்தலை நீதிமன்றத்தின் உண்மையான சாட்சியாக ஏற்றுக்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் பிரிவின் பிரகாரம் பிரதேசசபையொன்றுதாபிக்கப்படும் வேளையில் அப்பிரதேச சபையில் துணை விதிகள் ஆக்கப்படும் வரை முன்னர் நிலவிய உள்ளூராட்சி நிறுவனத்தினால் அமுலாக்கப் பட்ட துணைவிதிகள் தாபிக்கப்படும். பிரதேச சபை, தாபிக்கப்பட்ட தினத்தில் இருந்து செல்லுபடியாகும்.

நகரசபை கட்டளைச் சட்டத்தின் 236ம் பிரிவின் பிரகாகரம் புதிதாக நகரசபை யொன்று தாபிக்கப்பட்டவிடத்து நகரசபை உள்ளடங்குகின்ற பிரதேசம் முன்னர் நிலவிய உள்ளூராட்சி நிறுவனத்தினால்

ஆக்கப்பட்ட துணைவிதிகள் நகரசபை தாபிக் கப்பட்ட தினத்தில் இருந்து ஏற்புடையதாகும்.

புதிதாக மாநகரசபையொன்று தாபிக்கப்பட்ட விடத்து மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 325வது பிரிவின் (1)வது உட் பிரிவின் (உள)பந்தியில் ஏற்பாடுகளுக்கு அமைய முன்னர் நிலவிய உள்ளூராட்சி நிறுவனத்தின் துணைவிதிகள் ஏற்புடையதாக அமையும்.

இந்நிலைமை பொருட்கோடல் பற்றிய கட்டளைச் சட்டத்தின் 15ம் பிரிவிலும் மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் ஆற்றும் பணிகள் சட்ட அந்தஸ்துடன் எழுத்தில் இருக்கவும் அனைவருக்கும் சமமாகவும் நீதியாகவும் பணிகளை ஆற்றுவதற்கும் பிறழ்வான நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் வசதயீனங்கள் தொந்தரவுகளை கட்டுப்படுத்தவும் துணைவிதிகள் வாய்ப்பாக அமைகின்றன. சில உள்ளூராட்சி மன்றங்கள் இது ஓர் பாரிய பணி எனக்கருதி துணைவிதிகளை ஆக்குவதில் கவனம் செலுத்தாமல் இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. துணைவிதிகளை ஆக்குதல் சுமையான பாரிய பணியன்று உள்ளூராட்சி மன்றங்கள் பலத்துடன் செயலாற்றவும் சிறந்ததோர் உள்ளூராட்சி சேவையை அதிகாரப்பிரதேசத்தில் கட்டியெழுப்பவும் துணைவிதிகள் வழிகாட்டும்

**வே.முருகமூர்த்தி**

**தலைமையக சன சமூக அபிவிருத்தி அலுவலர்**

**பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மட்டக்களப்பு.**

# உள்ளூராட்சி மன்றங்களின் நூலக சேவை

கண்டது கற்க பண்டிதனாவான் என்னும் பொன்மொழிக்கிணங்க அறிவுடன் கூடிய வாழ்க்கைப் பயணத்தில் நூலகம் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். பெறுதற்கரிய பிறவியாகிய மானிடப்பிறவியை பெற்றெடுத்த நாம் பிறந்து வாழ்ந்து மடியும் வரை எத்தனை தடைக்கல்லை சந்தித்தாலும் அவை அனைத்தையும் அறிவு என்றும் கருவியால் மாற்றியமைத்து வாழ்க்கையை வெற்றிப்பாதையில் அழைத்துச்செல்ல துணை புரியும் நூலக சேவை உள்ளூராட்சி மன்றத்திற்கு கிடைத்தது வரப்பிரசாதமாகும். நூல்கள் பல பயில்வதன் விளைவாக அறிவைப்பெருக்கி அறிஞனாக்கி பல்துறை யில் பல்கலையும் கற்கவும், தற்கால சமூகத் தையும், எதிர்கால சந்ததியினையும் வழிகாட்டும் ஸ்தாபனம் நூலகம் என்பது யாமறிந்த உண்மை.

இந்த மகத்தான நூலக சேவையை உள்ளூராட்சி மன்றம் எல்லாப் பிரதேசத்திலும் செய்வது வெளிப்படை மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 உள்ளூராட்சி மன்றங்களிலும் 53 நூலகங்களும் தனது சேவையினை திறம்பட செய்து வருவதும் யாவராலும் ஏற்புடையதே அதனையும் விட உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கிவரும் சனசமூக நிலையங்களின் உள்நடாத்தப்படும் வாசிக சாலை என்றழைக்கப்படும் பிரிவும் சிறு நூலகமாக செயலாற்றுகின்றன. இந்நூல்கஞம், வாசிகசாலையும் ஏழை, பணக்காரன், பெரியோர், சிறியோர் எனப் பாகுபாடு இன்றி இன, மத, பேதமின்றி தன்னிகரில்லாச் சேவையினை ஆற்றுகின்றது. இவ்வாறான அறிவுப் பொக்கிசங்களாக விளங்கும் நூல்களை பொய்யா மொழிப் புலவரான வள்ளுவர் கூறுகிறார்.

"தொட்டனைத்தூறும் மனற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்து ஊறும் அறிவு"

மணற்கேணியை ஆழமாகத் தோண்டத் தோண்ட ஊற்றுநீர் பெருகும். அதுபோல நூல்களை ஆழ்ந்த அக்கறையுடன் படித்துக் கொண்டு இருந்தால் நம் அறிவும் பெருகிக் கொண்டே இருக்கம் என்கிறார். நூல்களைப் படிப்போர் தொகை பெருகும்போது சமூகத்தின் அறிவுமட்டம் மேம்பாடு அடையும். இதனை அடையும் பொருட்டு செல்வந்தர் எல்லா நூல்களையும் பணம் கொடுத்து வாங்க முடியும். ஏழ்மை நிலையில் உள்ளோர் நூல்களை பணம் கொடுத்து வாங்க முடியாது. அவ்வாறானவர்கள் நல்ல நூல்களை கற்றிட நூல்நிலையங்கள் உதவுகின்றன.

நூலகத்தின் மூலம், ஓய்வு நேரங்களை பயன்தரும் விதத்தில் உபயோகிக்கவும், புதியவிடயங்கள், நாட்டு நடப்புக்கள் போன்றவற்றை பத்திரிகைகள், வஞ்சிகைகள் வாயிலாக கற்றறிந்து கொள்வதற்கும், மாணவர்கள் பாடவிதானங்களை கற்பதற்கும் நூல் நிலையங்கள் நாடளாவிய ரீதியில் பெரிதும் பயன்படுகின்றன. நல்ல நூல்களை நயம்பட கசடறக் கற்றுத் தேறவேண்டும் இதனை பவிஞர் பின்வரும் பாடல்வரிகள் மூலம் குறிப்பிடுகின்றார்.

பழகும் நண்பர்கள் மாறிடலாம்
படிக்கும் நூல்கள் மாறிடுமோ
பழகிப் பழகி நம்மனதைப்
பக்குவப்படுத்துமாம் புத்தகங்கள்

இவ்வாறான நல்லநூல்களை நூல் நிலையங்களிலே பெருமளவில் காணமுடி யும். இதனால்தான் நம் முன்னோர் ஊர்தோறும் நூலகங்கள் தோன்றவேண்டும் என்று கூறினர்.

ஆறில்லா ஊருக்கு அழகுபாழ் என்பது புதுமொழி இவ்வாறாக நூலகத்தின் சிறப்புக்கு அங்குள்ள நூல்களே சான்றாகும். இவ்வாறான அறிவுப் பொக்கிஷங்களாக விளங்கும் நூல்களை கொண்ட நூலகத்தின் பிரிவுகளாக

1. வாசிப்பு பிரிவு
2. இரவல் வழங்கும் பிரிவு
3. உசாத்துணைப் பிரிவு
4. சிறுவர் பிரிவு
5. கட்புல செவிப்புல பிரிவு
6. நடமாடும் நூலக சேவை
7. நூற்பட்டியலாக்கப்பட்ட சேவை

என பல பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு கவிதை, கலை, இலக்கியம், கட்டுரை, வரலாறு, நாவல், சிறுகதை, சமயம், தொழில்நுட்பம், அறிவியல், நாடகம், தத்துவயியல் வினா விடை, ஆய்வுத்துறை நூல்கள், பொது அறிவு என பல துறையைச் சார்ந்த நூல்களை கொண்டு நூலகம் காணப்படுகின்றது.

நூலக வளர்ச்சியினையும், அபிவிருத்தியினையும் மேலோங்கச் செய்வதன் பொருட்டு நூலக ஆலோசனைக்குழு, வாசகர் வட்டம் எனும் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஆலோசனைக்குழு மூலம் நூலகத்தினை எப்படி வளர்க்கலாம் அபிவிருத்தி பாதையில் வழிநடத்தி செல்லலாம் என ஆலோசனைகள் ஒரு மாதத்திற்கு ஒரு தடவை நடாத்தப்படும் முன்னேற்ற கூட்டத்திலே முன்வைக்கப்படும். வாசகர் வட்ட அமைப்பானது நூல்களை சேகரிப்பதிலும் அதன் பாதுகாப்பிலும் அக்கறை செலுத்தும். நூலகத்தை மேற்பார்வை செய்வதும், பரிசீலிப்பதும், ஆலோசனை வழங்குவதும் வழிநடத்தும் உத்தியோகத்தராகவும் சனசமூக உத்தியோகத்தர் செயற்படுவார். நூலகர், நூலக உதவியாளர் நூலக சேவையில் முக்கியமானவர்கள், சரியான நேரத்திற்கு நூலகத்தை திறந்து, பராமரித்துப் பாதுகாப்பவர். பகுப்பாக்கம் செய்யப்பட்டு பட்டியலப்படுத்தப்பட்ட நூல்களை ஒழுங்கு முறையாக அடுக்கி அழகுபடுத்தி நல்ல சிந்தனை சிதறல்களையும், வாக்கியங்களையும் காட்சிப்படுத்துபவர் இவர்களுக்கான வேதனம் உள்ளூராட்சி மன்றங்களால் வழங்கப்படுகின்றது. நூகங்களுக்குரிய நூல்களை கொள்வனவு செய்வதற்கு அப்பிரிவு உள்ளூராட்சி மன்றங்கள் தனது வருடாந்த வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்கின்றது. அத்துடன் தனியார் நிறுவனங்களால் நூல்கள் அன்பளிப்பு செய்யப்படும். மாகாண உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலமும் தேசிய ஆவன வாக்கல்சபை மூலமும் நூல்கள் வழங்கப்படும். இதனை விட வாசகர் வட்டம் மூலமும் நூல்கள் சேகரிக்கப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் மாணவர்களிடையேயும், மக்களிடையேயும் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கவும் சமூகத்தில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்காகவும் வருடா வருடம் ஒக்ரோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதத்தை நினைவு கூர்ந்து பாடசாலை மட்டத்திலும், திறந்த மட்டத்திலும் பேச்சுப்போட்டி, கட்டுரை, கவிதை, விவாதம், சித்திரப்போட்டி போன்ற போட்டிகளை வைப்பதன் மூலம் வாசிப்பு பழக்கத்தை கூட்டுவதுடன் அங்கத்துவர் எண்ணிக்கையும் கூட்டுகிறது. அத்துடன் தேசிய ஆவன வாக்கல் சபையின் மூலம் நூலகங்கள் தர நிர்ணயம் செய்யப்படுவதுடன் தேசிய வாசிப்பு மாதத்தினை திறம்பட நடாத்திய நூலகத்திற்கு சான்றுகளும் விருதுகளும் வழங்குகின்றன.

உள்ளூராட்சி திணைக்களத்தினால் மாகாண மட்டத்திலும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் மாவட்ட மட்டத்திலும் சிறந்த நூலகத்தினை தெரிவு செய்யம் போட்டி வருடா வருடம் நடாத்தப் பட்டது. இதில் கடந்த 2010ம் ஆண்டில் பிரதேச சபை

களுக்கிடையில் நடாத்தப்பட்ட செங்கலடி பொதுநூலகம் மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி திணைக்களத்தினால் விருதும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்படி நடாத்துவதன் மூலம் எல்லா உள்ளூராட்சி மன்றங்களும் தனது நூலக சேவை சரியாகவும், ஒழுங்காகவும் மக்களுக்கு சேர வேண்டும் என்பதில் அக்கறை செலுத்த ஊக்கப்படுத்துகிறது.

"ஓர் நூலகம் திறக்கப்படும் போது நூறுசிறைச்சாலைகள் மூடப்படுகின்றன" என்பது விவேகானந்தரின் வாக்காகும். 2ம் உலக மகா யுத்தத்தின் போது எல்லாவற்றையும் அழியுங்கள் ஆனால் நூலகங்களை மட்டும் அழிக்காதீர்கள் என்றார் மாக்கசிய வாதியான கிட்லர். 1153ம் ஆண்டில் கொன்ஸ் தாந்தி நோபிள் எனும் நகரம் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்ட நேரம் அங்கு வாழ்ந்த மக்கள் பொன்னையே, பொருளையோ, வாசனைத்திர வியங்களை யோ, ஆபரணங்களையோ, ஆடைகளை யோ எடுத்துச்செல்லவில்லை மாறாக நூலகங்களில் காணப்பட்ட நூல்களையே எடுத்துச்சென்றனர். இதன் மூலம் அவர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இப்படியாக நூலகத்திற்கும் நூல்களுக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் தெளிவாகிறது.

எனவே வாசிப்புத்திறனை விருத்தி செய்யம் ஆய்வுக்கருகூலத்தினை பயன்படுத்தி படிக்கும் ஆற்றலும், படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் உருவாக்கும் சாவியாக உள்ளூராட்சி மன்றம் திகழ்கிறது தனது சிறப்பான மகத்தான சேவையினை வழங்கி தற்கால சமூகத்தையும், எதிர்கால சந்ததியினரையும் நல்வழிப்படுத்துகிறது.

**திருமதி.இந்துமதி விமலராஜ்**
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்



03. கிருஸ்ணபிள்ளைசிவநேசன்,

# அபிரா நகை மாளிகை

பிரதானவீதி,
கொக்கட்டிச்சோலை.

தொ.பே.இல:
0657915052,
0770857375



## தம்பலவத்தை மாணிக்கப்பிள்ளையார் ஆலயவீதி கொங்கிறீற் இடல் 01 ஆம் கட்டம்

(போரதீவுப்பற்று பிரதேசபை பிரிவில் தம்பலவத்தை கிராமத்தில் வசிக்கும் திரு இராமலிங்கம் அவர்களை பேட்டி கண்டபோது)

நாம் : ஐயா, இந்த வீதி திருத்தம் செய்யப்பட்டது சம்பந்தமான தங்கள் கருத்து என்ன?

இராமலிங்கம் ஐயா : தம்பி இந்த வீதி பள்ளமும், படுகுழியுமாக் கிடந்தது, போக்குவரத்துச் செய்ய ஏலாமலும், நடந்துபோக ஏலாமலும் இருந்தது இப்பதான் இப் பிரதேசசபை சேர்மன் ஆக்கள் இந்த வீதியத் திருத்தி எங்கட கஸ்டத்த எல்லாம் போக்காட்டி இருக்காங்க, இவங்களுக்கு எனது நன்றி தம்பி

நாம் : நன்றி ஐயா.

# ஸாகி ஸ்ரேசனரி

**பிரதான வீதி, கலுதாவளை – 01**

பதிவு இல :- DS / MS / 2 / A / 346

காகிதாதிகள், பாடப்புத்தகங்கள், விண்ணப்ப படிவங்கள், போட்டோ பிரதி, பெக்ஸ், பிறிண்டிங் மற்றும் அனைத்துவகை பரிசுப் பொருட்களும், அழகுசாதனப் பொருட்களும்

எமது வியாபார நிலையத்தில் விசேட விலைக் கழிவுகளுடன் பெற்றுக் கொள்ளமுடியும்.


தொடர்புகளுக்கு :-


0652251019 , 0771234660

## K.Senthilkumar

# SEA.MOON GARDAN (pvt) LTD HALL

**Kalmunai Road, Main Street,**
**Kirankulam - 06 Batticaloa.**






வைரமுத்து அமலதாஸ்

அமலதாஸ் மோட்டர்ஸ்

பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை. தொ.பே.இல:0776728040



கிருஸ்ணபிள்ளை நித்தியானந்தன்

போதினி நூல்நிலையம்,

பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை. தொ.பே.இல: 0653653983

# நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்

- கிழக்கு மாகாணத்தில் இவ்வாறான நிகழ்வுக்கு பூரண அனுமதி வழங்கிய உள்ளூராட்சி ஆணையாளரும் புறநெகும செயற்றிட்டத்தின் பணிப்பாளருமான திரு.மா. உதயகுமார் அவர்களுக்கும்.

- மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சியை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல பணியாற்றும் தவிசாளர்களுக்கும், செயலாளருக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும்

- விருது வழங்கும் நிகழ்வை நடாத்துவதற்கு இடத்தை வழங்கிய மட்டக்களப்பு மாநகர முதல்வர் பிரதி முதல்வர் மற்றும் மாநகர ஆணையாளருக்கும்

- நிகழ்வைச் சிறப்பாக மேற்கொள்ள மேலதிக நிதி அனுசரணை வழங்கிய நன்கொடையாளர்களுக்கும்

- இவ்வாறான செயற்பாடுகளை நடாத்துவதற்கு என்றென்றும் துனைபுரியும் IEC Specialist திரு A.S.கௌரிபாலன் பொறியியலாளர் அவர்கட்கும்.

- எந்தக் காரியத்தை செய்ய முற்படும் போதும் அவற்றைச் செவ்வனே செய்து முடிக்க அர்ப்பணிப்புடன் கடமையாற்றும் எமது அலுவலக உத்தியோகத்தர்களுக்கும்.




துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு. 0652053060.